# திராவிடநாடு

17-2-63 | வார வெளியீடு | விலை 16 காசு




# முகப்பில்.....

'தலைவன் வரவில்லையே' என்ற ஏக்கம், தலைவிக்கு மட்டும் அல்ல, தோழிக்கும் ஏற்படுவது உண்டு.

அகத்துறை வாழ்வில் தோழியின் பங்கு மிகப் பெரியது ஆகும். தலைவன் தலைவிக்கிடையே தோன்றிய காதல், கருகிவிடாமல் வளர்ந்து, தழைத்துப், படர்ந்து பயன்படுவதற்குத் தோழியின் துணையே பெரிதும் காரணம் ஆகிறது. தலைவியின் வாழ்வில் தோழி முக்கிய இடம் பெறுகின்றாள். தலைவி மகிழும்போது, உடன் மகிழுவது மட்டும் அல்ல, அவள் துயரம் கொள்ளும்போது அத்துயரைத் துடைப்பதும் தோழியின் பணியாகிறது. எதையோ சொல்வாள், என்னவோ செய்வாள் தலைவி 'துயரம் ஆறினால் போதும்' என்று நினைபபாள். 'இது கார் காலம் அல்ல' என்று பருவத்தையே மறுத்துக் கூறுவதும் அவளுக்கு எளிது. ஏதோ ஒரு வழியில் தலைவியின் துயரைத் துடைக்க வேண்டும் என்ற கவலை அவளுக்கு! அந்தக் கவலையினால் அவள் முகம் வாடிவிடும். ஒன்றும் வழி தோன்றவில்லையாயின் தலைவியை விடத் தோழியே மிகுதியாகக் கவலையோடு இருப்பாள். 'தலைவன் வரக் காணோமே' என்ற கவலையோடு, 'என்ன சொன்னால் தலைவியின் மனம் ஆறும்' என்ற புதுக் கவலையும் தோழிக்குத் தோன்றிவிடும். அதுபோன்ற நேரங்களில் தலைவி தோழியைத் தேற்றுவதும் உண்டு! வேடிக்கையான நிலைதான். ஆனால் வாழ்வில் எத்தனை வேடிக்கைகளைக் காணுகின்றோம்!

மருத்துவர்க்கு நோயாளி தைரியம் கூறுவதுபோல், தோழிக்குத் தலைவி ஆறுதல் சொல்லுகின்றாள்' அப்படி ஒரு ஓவியம்:

துறுகல் அயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளிறு இவரும் குன்ற நாடன்
'நெஞ்சுகளன் ஆக நீயலன்' யான் என
நல்தோள் மணந்த ஞான்றை மற்றவன்
தாவா வஞ்சினம் உரைத்தது
நோயோ தோழி நின்வயின் ஆனே?
(குறுந்: 36)

"தோழி, உருண்டையான கல்லின் பக்கத்தில் உள்ள மாணை என்னும் பெரிய கொடி, தூங்குகின்ற யானையின்மேல் படரும் நாட்டை உடையவன், "யான் உன் நெஞ்சகத்திலிருந்து பிரியேன்" என்று எனது தோள்களைத் தழுவியபொழுது கூறினான். அது உனக்கு ஏதேனும் வருத்தத்தைத் தருகின்றதோ?" என்பது தலைவியின் கேள்வி.

'அவன் என்னிடம்தானே கூறினான், அதற்கு நீ ஏன் வருந்துகின்றாய்?' என்று கேட்கின்றாள். துயரும் தன்னளவில் இருந்துபோகட்டும் என்று நினைக்கின்றாள் தலைவி.

குழந்தைக்கு நோய் என்றால், அக்குழந்தையைவிடத் தாயே பெரிதும் வருந்துகின்றாள். அதுபோல் தலைவியின் துயரம் கண்டு காதல் பயிரின் தாயாகிய தோழி வருந்துகின்றாள். தலைவியோ, உனக்கு ஏன் வருத்தம், நோய் எனக்குத் தானே என்று கேட்கின்றாள்.

ஆனால், இந்தக் கேள்வி ஆழ்ந்த துயரத்தினால் தோன்றியது. மனம் தாங்கமுடியாதகாரணத்தால்தான், ஒன்றாகி நின்ற தோழியையும் இப்போது வேறாக்கிப் பேசுகின்றாள். என்றாலும் தன் துயரம் வெடித்து வருகின்றது பேசும் சொற்களில் பேதை மன நிலை தெளிவாகிறது.

தோள்களை அணைந்த தலைவன் "உன்னைப் பிரியேன்" என்று சொல்லவில்லையாம்! 'உன் நெஞ்சமாகிய இடத்திலிருந்து (நெஞ்சுகளனாக) பிரியமாட்டேன்' என்றுதான் கூறினாலும். அதாவது அவனைப்பற்றிய நினைப்பு எப்போதும் தனக்கு உளது என்பதை நுட்பமாக வெளியிடுகின்றாள்.

அதுமட்டும் அல்ல; இன்னொன்றும் தலைவியின் சொற்களிலிருந்து தெரியவருகிறது. தலைவன் நாட்டைப் பற்றிய குறிப்பிலும் ஒரு நயம் அமையுமாறு புலவர் பரணர் பாடியுள்ளார் அவன் குன்ற நாட்டினன். அக்குன்றில் மாலைக் கொடிகள் வளர்ந்துள்ளன. அவை பக்கத்தில் உள்ள பெரிய உண்டை (துறு)க்கல்லின்மீது பற்றிப் படருவது இல்லை. அங்கு வந்து நிற்கும் யானையின்மீதுதான் படருகின்றதாம். நிலையான கல்லின்மீது படர்ந்தால், படர்ந்த நிலை நிலைக்கும். ஆனால் மாணைக்கொடியோ, வந்து நிற்கும் யானையின்மீது படருகின்றது. யானை அகன்றதும், கொடியும் அலையும். தன் நிலையும் இப்போது அப்படிஆயிற்று என்கிறாள். கல்போல் வீடு இருக்க அங்கு தானே இராமல், யானைபோன்ற தலைவன்மீது பற்றுக்கொண்டாள். இப்போது கொடிபோல் துயர் உறுகின்றாள்.

உள்ளத்தில் இருப்பது உருவம் பெற்று வருகிறது. என்னதான் தைரியம் மிக்கவளைப்போல் பேசினாலும், பேச்சின் இடையில் பேதை நெஞ்சத்தின் புலம்பலும் கேட்கின்றது அல்லவா?

அன்று தலைவனோடுதான் இருந்த நிலை—தலைவியின் மனத்திரையில் நிழலாடுகிறது—அதனையே முகப்பிலுள்ள ஓவியம் எடுத்துக்காட்டுகிறது.

★

**விற்பனையாளர்கட்கு**

அதிக இதழ் வேண்டுவோர் புதன்கிழமைக்குள் தெரியப் படுத்தவும்.

மலர் 21 ] ஆண்டு சந்தா ரூ. 8 (17—2—1963) தனிப்பிரதி 16-காசு [ இதழ் 25.

# மண்ணில் புதையும்!

விடிந்தது பொழுது. மடிந்தது நிலவு. கண்ணைக் கவரும் எண்ணற்ற வண்ணச் சிட்டுக்கள் சின்னச் சின்ன ஒலிகளில் கீச்கீச் எனப் பேசின. அப்போதுதான் மலர்ந்திருந்த மலர்கள் மணம் வீசின.

மறைந்து தூங்கிக்கிடந்த வேங்கையை விரைந்து சென்ற வீரன் நோக்கிவிட்டான். வேட்டையில் ஆர்வமுள்ள வேந்தன் அவன். வேட்டைக்காகக் காட்டிலும் மேட்டிலும் அடிக்கடி சுற்றித்திரிந்த கொற்றவன் அவன். தான் நோக்கிய வேங்கையைக் கடுமையாகத் தாக்கித் துரத்திவிட்டான். மரமேறிப் பரண் அமைத்துத் துப்பாக்கிச் சூடு கொடுத்தல்ல!

தூங்கிய வேங்கையைத் தட்டி எழுப்பிடத் தாங்கிய வேலுடன் சென்று, எட்டி உதைத்தான் மெதுவாக. எழுந்த வேங்கை வீரக்கனலை வீசியது. தூக்கிய தலையுடன் நோக்கிய வேங்கையின் வாலைப் பற்றிச் சுற்றினான் அக் கொற்றவன். வீறு கொண்டெழுந்த வேங்கை பாய்ந்திடப் பதுங்கியது. பதுங்கிய வேங்கையைக் கண்டு ஒதுங்கிய வேந்தன் அஞ்சவில்லை. ஒரே நேரத்தில் இரு உயிர்களும் பாய்ந்தன. கோரமாகத் துவங்கிய சண்டை நீண்ட நேரமாக நடந்தது. சோர்வு, களைப்பு, இருவருக்கும் உரியதாகி விட்டது. பின்வாங்கியது வேங்கை; புறந்தந்து ஓட அல்ல. மீண்டும் பாய! பாய்ந்தது வேங்கை. வாளை அதன் வயிற்றிலே செருகிவிட்டான் அவ்வீரன். பாய்ந்த வேங்கை சாய்ந்ததைக் கண்ட வேந்தன், ஓய்ந்த கரங்களை உதறிக்கொண்டு, காய்ந்த நாவை உமிழ்நீரால் ஊறவிட்டு, இளைப்பாறி, பின் மறைவிடத்திலிருந்து. உறைவிடமாம் நாட்டிற்கு மீண்டான். தூங்கிய வேங்கையை எழுப்பி, நேர் நின்று போர் புரிந்து வெற்றி கண்ட வீரனை மக்கள் அனைவரும் மகிழ்வித்தனர் ஆரவாரஞ் செய்து.

புலவரும், உழவரும் புகழ் பாடினர்;

கலைஞரும், இளைஞரும் இசை பாடினர்.

அவ்வேந்தன் முத்தமிழ் நாட்டு வித்தகன். தீந்தமிழ்த்தேனைச் சுவைத்தவன் அவன். அவ்வேந்தனின் வழித் தோன்றல்கள்தான் நாங்கள்.

போர்க்களத்தில் மாற்றரசரின் வாள் ஒடிந்துபடக் கண்ட தமிழ்க்குல மன்னன் ஒருவன், தான் உடன் கொணர்ந்த பிறிதொரு வாளை மாற்றானுக்குக் கொடுத்து அருஞ்சமர் புரிந்து வெற்றி கண்டான். அவ்வீரனின் வழித் தோன்றல்கள்தான் நாங்கள்.

எம்மிடமே உன் வீரத்தைக் காட்ட வந்துவிட்டாயே!

வீரம்விளங்கவேண்டும் என்பதற்காகப் பொய்எல்லை பொறித்து வீண் சண்டைக்கு வருகிறாயே! அட **சீனனே!!!**

உனது சர்வாதிகாரம் சகதியுடன் கலந்து சரணாகதி அடைந்துவிடும்.

பஞ்சசீல அமிர்தத்தை நஞ்சிலே கலந்து குடிக்கத் துணிந்துவிட்டாயோ?

மஞ்சத்திலே நீள் உறக்கம் கொண்டுவிடுவாய்.

முதுகில் புண்பட்டுத் தூக்கி எறியப்படுவாய்.

உமது கொடி இந்திய துணைக் கண்டத்திலே சிறகடித்துப் பறக்க ஆசை கொண்டீர்களோ?

அட புற்றீசல்களே! இறகு உதிர்ந்துவிடும். இருக்கும் நிலை இறந்துவிடும். இறக்கும் நிலை பிறந்துவிடும்.

நாங்கள் பாசக்கரமும், நேசக்கரமும் நீட்டினோம்.

பதிலாக நீசச்கரமும், மோசக்கரமும் நீட்டுகிறாய்.

அன்பு செலுத்தினோம்; அதற்கு அம்பு செலுத்துகிறாய்.

மோசக்காரனே! தாய்மார்கள் தாலி தந்திருக்கின்றனர்; தருகின்றனர் உனக்கு வேலிபோட.

பெண்குலம் பொன் தருகிறது சொந்த மண் காக்க.

இளைஞர் நித்தம் இரத்தம் கொடுக்கின்றனர் உன் பித்தம் தெளிவிக்க, ஒவ்வொரு குடும்பத்திலும், பொன்னைக் கொடுக்கும் அன்னைகள், களம் செல்லத் துடிக்கும் காளைகள், வைத்திய நற்பணி புரிய நங்கைகள், சிற்றுதவி புரிய சிறார்கள் இருக்கிறார்கள். மீண்டும் நெருங்காதே. நொறுங்கி விடுவாய்.

சொந்த நாட்டைக் காட்டிக் கொடுக்கும் மாக்களே! பகுத்தறிவைப் பாழாக்காதீர்கள்; பண்பைப் பயன்படுத்

துங்கள்—காட்டிக் கொடுத்தால் புகழ்க் கம்பம் நாட்டி வாழ்ந்துவிடலாம் என்ற எண்ணமோ? அல்லது நீங்கள் பதவிப் பித்தரா? காட்டிக் கொடுத்த கயவர்கள் துயரில் சிக்கிச், சின்னு பின்னமாகிச் சிதைந்து சீரழிந்து வாழ்க்கையை மாய்த்திருக்கின்றனர். வரலாறு கூறுகிறது. உலகம் தெரியாதவர்களே! உணர்ந்துகொள்ளுங்கள். சொந்தக் கட்சியைக் காட்டிக்கொடுத்தவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக்கொண்டிருப்பதை மனதிற்குள் நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். காட்டிக்கொடுக்கும் கயவர்களே! இன்பத்தையும், துன்பத்தையும் மாறி மாறி வீசி விட்டு ஓடும் காலவேகத்தில் தூசெனப்போவீர்.

பஞ்சசீலத்திற்குத் தலையசைத்தீர்கள். நம்பினோம் உண்மையென்று. இப்போது துப்பாக்கிமுனை அசைக்கிறீர்கள். ஏமாந்துவிடவில்லை நாங்கள்! இறுமாந்து கிடக்காதே!

விடப்போகிறோம் வீரக்கணைகளை! ஓடப்போகிறாய் புறங்காட்டி! சிரிக்கப்போகிறது உலகம் உனது ஈனத்தைக்கண்டு. இங்கிலை கசப்பெனில் வைத்த காலை எடு. திரும்பி ஓடு. முக்காட்டை அணிந்து மூலைவீட்டில் படு. மீண்டும் மண்ணாசைகொள்ளாதே! கவ்விவிடுவாய் மண்!!!

எல்லா முனைகளும் இணைந்துவிட்டன போர்க்கால முடிவுவரை. உனதுகொட்டம் அடக்கத் தயாராகிறது திட்டம். இனி உனக்குத் தோல்விதான். உன் பிறப்புரிமை அதுதானே! என்ன? விளங்கவில்லையா? பிறப்புரிமை என்ன என்பதுகூடத் தெரியவில்லையா? ஆம். அதுதான். "அருமையான தோல்வி!"

நாங்கள் தந்த துப்பாக்கிச் சூடால், வெந்த உடம்புடன் வந்தவழியே சொந்த நாட்டிற்கு பந்துக்களுடன் பறந்துவிடு! அத்துடன் மறந்துவிடு மண்ணாசையை! துறந்துவிடு வஞ்சக வேலைகளை!

மாற்றானுக்கு வாள்கொடுத்துப் போர்செய்து வெற்றி கண்ட இனம் தமிழ்இனம். அவ்வினம் உன்போன்ற வஞ்சகக் கள்ளர்களைப் பள்ளம்தோண்டிப் புதைத்துவிடும்.

மீறி முன்னேறினால்.........

உனது துப்பாக்கித் தடியும் ஒடியும்,

உனது சர்வாதிகாரக் கொடியும் மடியும்,

உமது மூர்க்கப் படையும் பணியும்,

உனது சீனக்குடியும் மண்ணில் புதையும்!

*

# வீண் செலவுகள்!

நெருக்கடியான இந்த நேரத்தில் தேவைக்கு அதிகமான செலவுகளையும், வீண் செலவுகளையும் குறைத்து நாட்டின் பாதுகாப்புக்கு உதவுவதில் எல்லாரும் ஒன்றுபட்டு நின்று பணியாற்றவேண்டும் என்பதுதான் இன்றைய இலட்சியமாகும்.

ஆனால், சிலர், இதற்கு முற்றிலும் மாறாக நடந்து கொள்கிறார்கள். எடுத்துக்காட்டாக ஒன்றை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

அண்மையில் தெனாலிக்கு வருகை தந்த ஆந்திர முதல்வருக்கும், அகில இந்திய காங்கிரசுத் தலைவருக்கும் ரூபா 30,000-00 வரை செலவு செய்து வரவேற்பளித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இது, எவ்வளவு தேவையும், அவசியமும் அற்ற வீண் செலவு என்பதை எடுத்துக்காட்டித் தோழர் கே. சிவராம ரெட்டி என்பவர் "இந்து" இதழில் ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

நாட்டின் நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க இந்தத் தொகை பயன்பட்டிருக்கக் கூடாதா என்ற தமது கருத்தையும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# நினைவுச் சின்னம்

**பாண்டியன்**

அதிகாலையில் வழக்கமாக ஆற்றங்கரைக்குச் சென்றுகொண்டிருந்தேன். கதிரவன் ஒளி அந்தப் பள்ளிக்கூடத்தின் சுற்றுச் சுவரில் பட்டும் படாமலும் இருந்தது. சுவரின் ஒரு பக்கத்தில் அழகான சித்திரம் ஒன்று தீட்டப்பட்டிருந்தது. அந்தச் சித்திரம், என் உள்ளத்தை அடக்கமான முறையில் கவர்ந்தது. அது மட்டுமல்ல; என் வாழ்வில் இப்படிப்பட்ட ஓவியத்தை நான் கண்டதில்லை. பள்ளிக்கூடம் ஊரின் ஓர் கடைசியில் இருந்ததால், அதன் சுவரில் எவ்விதமான விளம்பரங்களும் இல்லை. நேர்த்தியான அவ்வோவியம் 'பளிச்'சென்று பார்ப்பவர் கண்களுக்குக் கலை விருந்து அளித்தது.

அது ஓர் குழந்தை ஓவியம்! உள்ளத்தைக் கனிய வைக்கும் பொக்கைவாய் திறந்த காட்சி! பொல்லாத சிரிப்பு! இப்படிக் குழந்தை காட்சி தந்தது.

ஓர் பெரிய தென்னை. அதன் பக்கத்தில் குட்டித் தென்னை. வாழை மரங்கள் சில. மணல் மேடு. கடல் வெளி. இத்துடன் இணைந்து தவழ்ந்தது அக்குழந்தை. அருமையான காட்சிகளைக் காட்டிச், சிந்திக்கத் தூண்டினார் அதை வரைந்த ஓவியர். குழந்தை என்னிடம் பேசுவது போல இருந்தது. பரந்த கடலைப் போல அதன் உள்ளம் இருப்பதாக எண்ணினேன்.

'நான் இந்த உலகில் பிறந்துவிட்டேன். இயற்கையின் எழிலில், இன்பக் களிப்பினால் நான் வாழ்கிறேன். எனக்கு நன்மை என்றும், தீமைஎன்றும், பகுத்தாராயும் பண்பு தெளிவாக இல்லை. உலகைப் புரிந்துகொள்ளவில்லை'—இப்படி அக்குழந்தை மொழிவதாகக் கற்பனை செய்தேன்.

மற்றொன்றும் என் சிந்தனைக்கு வந்தது. ஓவியத்தை வரைந்தவன் யார்? எதற்காக இதை மட்டும் வரையவேண்டும்! எத்தனையோ நவநாகரிகப்பெண்மணிகளின் அலங்கார உங்களை எழுதினால்பொன்னும்பொருளும் கிட்டுமே! எத்தனையோ திரை நட்சத்திரங்கள்; அவர்களின் ஓவியங்கள் இரசிகப்பெருமக்கட்குக்கலை விருந்தாகும். அதை எழுதிப் பிழைக்கலாமே! சாதாரண குழந்தையின் எழிலை இங்கே சித்திரமாகக் காட்டுவதில் என்ன பெருமை? யார்மதிப்பார்கள்?என்ன பெற முடியும் இதன் மூலம்! ஊரின் முக்கியமான சுவரில் வரைந்தால், பத்துப்பேர் பார்த்து மகிழ்வர். யாரும் பார்க்கவியலா இடத்தில் வரைந்து ஏன் ஆற்றலை வீணாக்க வேண்டும்? கரித்துண்டால் கைநோக எழுதியுள்ளான். என்னதான் அந்த ஓவியனின் எண்ணம்! கலை வளர்க்கும் சிறந்தபண்பா? எதுவுமே புரிந்து கொள்ளாமல், ஆற்றங்கரைக்குச் சென்று மீண்டேன்.

அன்று முழுவதும் என் மனம், அந்த இனந்தெரியாத ஓவியனையே சுற்றிக்கொண்டிருந்தது. கலைமனம் படைத்துச், சிறிதும் கர்வம் இல்லாத அந்த ஓவியனைக் காண என் மனம் விழைந்தது. நகருக்குள் வந்தேன். எத்தனையோ விளம்பரங்கள். ஏகப்பட்ட திரைப்பட ஓவியங்கள். நான் கண்ட ஓவியங்கள் அனைத்தும் வரைந்தவன் பெயரைத் தாங்கி இருந்தன. ஆனால் குழந்தை ஓவியத்தை வரைந்தவன் பெயர் அங்கு இல்லை. அவ்வோவியமே எனதுள்ளத்தை ஈர்த்தது. மறுபடியும் அதைக் காணவேண்டும் என்ற ஆவல் என்னிடத்தில் எழுந்தது. என் நண்பர்களிடம் அதைப்பற்றி எடுத்துரைத்தேன். பிள்ளைக் குறையுடைய நண்பன் ஒருவன், அதைக் காண வேண்டுமென என்னிடம் தெரிவித்தான். நாளை பார்ப்போம் என அவனிடம் தெரிவித்தேன்.

அன்று இரவினிலே நான் தூங்கும் போது கனவு கண்டேன்—அக்கனவிலே உள்ளம் வணங்கும் ஓவியத்தை, கைகொண்டு எவரோ அழிப்பதாக. அந்நிமிடமே படுக்கையினின்று எழுந்துவிட்டேன். என்னருகில் என் குழந்தை அருமையாகத் துயில்கொண்டிருந்தது. தூரத்தே படுத்திருந்த என் மனைவி எழுந்துவிட்டாள்.

"என்னங்க இன்றைக்கு கனவு மயமாக இருக்கு" என்றாள்.

"நீ கனவு கண்டாயா"

"ஆம்; குழந்தையை யாரோ தூக்கிக்கொண்டு போகிற மாதிரி"

"நானும்தான் கனவு கண்டேன். பள்ளிக்கூடத்துச் சுவரில் அழகான ஓவியம் ஒன்று தீட்டப்பட்டிருப்பதாகக் கூறினேனே, அதை யாரோ கையால் அழிக்கிறார்கள். இப்படிக் கனவு கண்டேன்."

"உங்களுக்குச் சித்திரப் பைத்தியம். தூங்குங்க" என்று கூறிவிட்டுத் துயில் கொண்டாள். நானும் உறக்க முற்றேன்.

அதிகாலையில் வழக்கம்போல ஆற்றங்கரைக்குப் போனேன். மறுபடியும் அந்தச் சித்திரத்தைக் காணலாம் என்ற ஆவலில். மகிழ்ந்திருந்த என்னை ஏமாற்றியது மற்றொரு பொற்சித்திரம்; ஆம்; நான் நேற்றுக்கண்ட ஓவியம் அங்கில்லை, கனவும் பலித்தது என்றே எண்ணினேன். ஆனால், புதிய ஓவியம் என்னைப் பிரமிப்புக் கொள்ளச் செய்தது. நான் காண்பது ஓவியமா, இல்லை; நடமாடித் திரியும் சமுதாய பிச்சைக்கார இளைஞனு?

சோகமே எனது பிறப்புரிமை. அதுவே என் மாபெரும் சொத்து என்று சொல்பவனைப் போல, முழத்தில் ஓர் துண்டும், முண்ட உடலோடும் காட்சி தந்தான் அவ்விளைஞன்.

அவனைப்போல உலகில் ஏராளமானோர் வீதிகளிலே அங்குமிங்கும் அலைந்து திரிகின்றார்கள். குறைந்தது ஊருக்குப் பத்தும் பத்துக்கு மேலும் உண்டு. வறியநிலை பொருந்திய வாழ்வைத்தான் ஓவியன் உருவகப்படுத்தி, உருவாக்கியிருந்தான்.

காணப்பட்ட இளைஞன் விழிகளில் கருணையும், அளப்பரிய பசியால் வாடும் வயிறும், உள்ளமும்; என்னதான் இயற்கையாக மனிதன் கவலையில் ஆழ்ந்திருந்தாலும், கற்பனைப் படைப்பின் அருமையாய் எவரும் உள்ளரோ? என்னும் கேள்வி என்னுள் எழுந்தது! உச்சமடைந்த சோகக் காட்சி. உள்ளம் கொள்ளும் கண்விழி! புருவ ஒழுங்கு! ஒட்டியவயிறும் உணர்ச்சி மெலிந்த நடையும்காண்பவர்களைக் கண்கட்டி மயக்கியதே கலை! என்ன கலை! எத்தனை அழகு! நேற்றுக் குழந்தையாக இருந்த ஓவியம் இன்று வாலிப உருப்பெற்றுக் காணப்பட்டது!

இவ்வோவியத்தையும் அவனே தான் தீட்டியிருக்கவேண்டும். ஏன் இவ்வாறெலாம் எழுதுகிறான்? சித்திரத்தில் காணப்படும் மனிதனே அவ்வோவியனின் உண்மைச் சித்திரமோ? இதே இடத்தில் ஏன் எழுத வேண்டும்?பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பலாமே! அழகுக்கலையை ஆபாசப்படுத்தும் ஓவியர்களைப் போற்றி வளர்க்கும் உலகில், இவனுக்கு ஓர் இடம் கிட்டாதா?

மண்சுவரில் தீட்டிப் புகழ்பெற முடியுமா? மன்னர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருந்தால் மாளிகை வாழ்வில் கலை வளர்த்திருப்பான். இன்றைய நாளில் ஏழை ஓவியனுக்கு இடமேது! சுதந்திரமாகச் சுற்றிலும் தென்படும் சுவர்களை ஓவியத்தால் அழகு செய்யும் பணியை இவன் செய்வதனுல் யார் போற்றுவர்? எவர் பேணுவர்? விந்தை மேவிய ஓவியனாக இருக்கிறுரே! என்று என்னுள் நான் கூறிக் கொண்டேன்.

ஆற்றுக்குச் சென்றுவிட்டு, வீட்டை அடைந்து மனைவியிடம் சொல்ல அவளருகில் சென்றேன்.

"ஏங்க உங்களைப் பார்க்க ஒருவர் வந்திருந்தாரே"......என்றாள்.

"அடடே மறந்துபோனேன். நேற்று அவன் என்னுடன்வந்து, குழந்தை ஓவியத்தைப் பார்க்க ஆசைப்பட்டான். அதனுல்தான் காலை வந்திருக்கான்" என்றேன்.

"அந்த ஓவியம் அங்கு இருந்ததா?"

அவன் என்னுடன் வந்திருந்தால் கூடக், குழந்தை ஓவியத்தைக் கண்டிருக்க முடியாது. கனவில் தோன்றியதுபோல, வரைந்த ஓவியன் அதை அழித்துவிட்டான்."

"அப்படியா.........ஏன் அழிக்க வேண்டும்?"

"அதை அழித்துமீண்டும் ஒரு சித்திரத்தை அங்கேயே தீட்டிஉளான்"

"இன்றைக்காவது அந்த நண்பரை அழைத்துப்போய்க் காண்பியுங்கள்" என்றாள்.

"ஆகட்டும்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

அந்த நண்பரைச் சந்தித்தேன். அவரிடம் கூறினேன். வியப்படைந்தார்! ஏதோ விளையாட்டுத்தனமாக எழுதுகிறுன் என்றும் சொன்னார்.

விளையாட்டுக்கு வரைகிறுன் என்று முழுக்கக் கூறிவிடமுடியாது. ஏதோ காரியமாகத்தான் எழுதுகிறுன். சிறந்த கலைஞன். கலைப் பித்தன் என்றும் கூறலாம். யாரும் காரணத்துடன் வரையாத கருத்துள்ள ஓவியத்தை வரைகிறுன். அதற்காக அவனைப் போற்றுகிறேன். நாட்டிலே மறைந்துகிடக்கும் கலையை, மாசற்ற முறையில் காட்டிடவல்ல ஆற்றல் படைத்தவனை உலகம் போற்றவில்லை என்பதை அந்த ஓவியன் உணர்ந்திருக்கிறுன், பல துறைகளிலும் அறிவு உள்ளவர்கள் வாழ இயலாமற் போகின்றனர் என்பதை உலகுக்கு உணர்த்தவே வெளிப்படையாகச் சித்திரங்களைத் தீட்டி, மறைந்து வாழ்கிறுன். அவன் மறைந்து வாழ்ந்தாலும் நாம் கண்டுகொண்டுதான் இருக்கிறோம் என்று சொன்னேன்.

"எப்படி அவனைக் காண்கிறோம்" என்றார்.

அந்த ஓவியமே அவனைக் காட்டுகிறது. ஓவியத்தில் காணக்கிடைக்கின்றவன் அவனாகத்தான் இருக்கும். அவனைத்தான் சித்தரித்து உள்ளான். உலகை விழிப்படையச் சொல்கிறுன். என்னைப்போன்ற ஓவியர்கள் இப்படித்தான் அலைகிறோம் என்பதைக் காட்டியுள்ளான். இதை விடத் தெரியப்படுத்தும் வழி வேறொன்றும் அவனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

"ஆம் நண்பரே. நீங்கள் கூறுவதில் முழுஉண்மை இருக்கிறது. இன்றைய உலகம் அப்படித்தானே இருக்கிறது" என்றார்.

"ஆம் நண்பரே எங்கும் இப்படிப்பட்ட திறமையாளர்கள் நிறைந்து கிடக்கிறார்கள்" என்றேன் நான்.

"அவன் ஓர் ஏழை. பரம ஏழை" தெளிவாகக் கூறினார் நண்பர்.

"பெயருக்கும், பணத்துக்கும் எழுதும் ஓவியர்களைவிட, எவ்வளவோ சிறந்த இந்த உண்மைக் கலைஞன், வறுமையால் வாடிக் கொண்டிருக்கிறுன். அவனை நாம் எங்குதான் காண்பது?" என்றேன். மறுநாள் காலை வருவதாகக் கூறிவிட்டு நண்பர் சென்றுவிட்டார்.

நான் எப்போதும் அவன் நினைவாகவேயிருந்தேன்.

அன்றிரவும் பலவிதமான கனவு கண்டேன். ஏராளமான ஓவியங்களை எனக்கு ஒருவன் அளிப்பதாகவும், வாங்கிக்கொண்டு பணம் தருவதாகவும்.

அதிகாலை. ஆற்றங்கரைக்குச் செல்லும் நேரம் வந்தது. கதிரவன் ஒளி எங்கும் பரந்து கிடந்தது. என் நண்பர், தன் வீட்டுத் திண்ணையில் எனக்காகக் காத்திருந்தார். இருவரும் புறப்பட்டோம். நேற்றுக் கண்ட ஓவியம் இன்றைக்கு இருக்காது என்றே எண்ணினேன். தூரத்தேயிருந்து சுவரைப் பார்த்த போது குழந்தைகள் அதனருகே கூடி நின்றனர். ஓவியம் வரைந்தவன் அங்கு இருக்கிறுன் என்று

எனக்குப் பட்டது. அங்கு சென்றதும் புதிய ஓவியம் ஒன்றைத்தான் கண்டேன். ஓவியனும் அங்கில்லை. குழந்தைகள் அமைதியாக நின்று பார்த்துக்கொண்டிருந்தனர்.

முதிர்ந்த கிழவன் அந்த ஓவியத்தில் இடம் பெற்றிருந்தான். பெரும் அதிர்ச்சியும் உவகையும் எனக்குள் ஏற்பட்டது.

அவ்வோவியம் புனிதமான தன்மையுடன் காட்சி தந்தது. கலை நுணுக்கங்களை அங்கே கணிசமான அளவு கண்டேன். நான் ஓவியத்தின் திறனை அறிய இயலாதவன் என்றாலும், பளிச்சென விளங்கும் ஓவியத்துக்கு முகமும், அதற்கேற்ற தாடியும், சிறந்த ஆற்றல் பொருந்திய கண்ணும், பார்வையில் ஒழுங்கும், பார்ப்பவர் இதயத்தை ஊடுருவக்கூடிய கவர்ச்சியும், புதுமையான கலையொன்றும் நான் காணக் கிடைத்தது.

என் நண்பர் அசைவின்றி நின்றிருந்தார்.

குழந்தைகளிடம் ஒரு பரபரப்பும் இல்லை.

"நண்பரே கண்டீரா கலையை!" என்று கூறியவண்ணம் அவரைப் பார்த்தான்.

சிந்தையெலாம் எங்கோ நிலைத்திருக்க, "கலையும் கண்டேன்! எழுதிய கலைஞனையும் கண்டேன்!" என்றார்.

"கலைஞன் எங்கே?"

"அவ்வோவியத்தில் காணப்படுவர்தான் இதையெலாம் எழுதுகின்றார்." என்றார்.

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"பழுத்த கலைஅறிவு மிக்கவன் இதைத் தீட்டியிருக்கிறான். அவன் இவனேதான். வேறு யாருமல்ல" என்று மொழிந்துவிட்டு அசைவுற்றார்.

"இருக்கலாம். அந்த ஆள் எங்கிருப்பார்? மறைவாக ஏன் அலைகிறார்? புதிராக இருக்கின்றதே" என்றேன்.

"நண்பரே! காலத்தின் மாற்றத்தைக் காண இந்த ஓவியம் எவ்வளவு தெளிவானது தெரியுமா! உடற்சுருக்கங்கள், முகச் சுருக்கங்கள்; அதனதன் நிழலமைப்புகள். இவைகளை வரைந்த அழகே அழகு. பொன்னுடை போர்த்திப், புகழ்மாலை சூட்டிப் பாராட்டப்படவல்ல கலைஞன்; கூழுக்கும், உப்புக்கும், இந்நகரின் எங்கோ ஒரு மூலையில் அலைகின்றான். கலைவாழும் இடம் இந்த மண் சுவர். கலைஞன் உறையும் இடமோ சத்திரம், சாவடி, வீதி, இதுதான்! வாழ வேண்டியவர்கள் வாழாமற் போக வகை செய்யும் சமுதாயம் இது! கலை வளர்ந்த நாட்டைக் காண்பவர் போற்றுவர்! அதுதான் புகழ் காட்டும்! பெயர் மொழியும்! இவ்வாறு அந்த அன்பர் கண்ணீர் வடிக்காத குறையாய்க் கூறினார்.

உண்மையான கலைபோற்றும் கலைநுகர்வு கொண்டோர் குறைவு. கலையன்னை இவன் கைகளில் கூடி நிற்கிறாள். வறுமைப் பேயும் ஒட்டிக் கொண்டுளது. சித்திரம் காட்டும் மனிதர்போல நாம் அன்றாடம் பார்க்கிறோம். அதிலே உண்மைக் கலைஞரை நம்மால் உணரமுடியாது. நாளை என்ன நிகழுமோ? எங்கிருந்தாலும் குறைவின்றிக் கலை வளர்க்க விரும்பும் அவர் வாழவேண்டும் என்று நான் கூறினேன்.

இருவரும் அதைப்பற்றி உரையாடிக்கொண்டே ஆற்றுக்குச் சென்று மீண்டோம்.

மறுநாள் அங்கே அந்த கலைஞனைக் கண்டேன். ஆம்; ஓவியங்களை வரைந்த கலைஞன் அங்கு மயங்கிக் கிடந்தார். அவரருகே ஏராளமான ஓவியங்கள். சாயம் தீட்டப்பட்ட ஓவியங்கள் பல. பெரிய புத்தகத்தில் சித்திரங்கள் முற்றும் வரைந்த நிலமையில் இருந்தன. கையில் கரித்துண்டுப்பை ஒன்றும் ஓவியனிடம் இருந்தது.

அவருடைய நிலமையை நன்குணர்ந்த நான் பக்கத்தே நின்றவர்களை நகரச் சொல்லி கைகொண்டு தூக்கி, மடியில் சாய்த்து, தண்ணீர் தெளித்தேன். சூடான பானம் ஒன்றும் கொடுத்தேன். சிறிது களைப்புக் குறைவுற்றது.

அங்கு நின்றோர் அனைவரும் கண்ணீர் உகுத்தனர். அவருக்குப் பேச்சு எழவில்லை. இந்த நிலைமையை எண்ணிக் கடல் அலைகளைப்போல என் இதயம் வேதனையைத் தோற்றுவித்தது. எவ்வளவோ இடைஞ்சலான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்... அவர் பசியுடன் நீண்டநாள் போராடி இருக்கிறார்.

கலை, கலைஞன் என்று வாய்குளிரப் பேச்சில், எண்ணத்தில், எழுத்தில் போற்றுகின்றார்களே தவிர; கலைஞனை எவன் வாழவைத்தான்? நாட்டிலே தோன்றி மறைந்த கலாசாரத்தை விளக்க கலைகள்தானே முன்னோடிப் பொருள்கள். கலைஞனை நாவில் போற்றுவதும், புகழ்வதும், ஏட்டிலே இணைப்பதும், எழுதி மகிழ்வதும்தானே! நடைமுறையிலே நற்கலைஞன் வாழச் சமுதாயம் கண்திறந்து வழிகாட்டியது கிடையாது. உண்மைக் கலைஞனைப் போற்றி ஆறுநல்தரக் கலை நுகர்வோர் கூடத் தவறிவிட்டார்கள். கலைமனமில்லாரைச் சிலை வைத்துப் போற்றுவதும், புகழ்வதும், வழிவழி சிறப்பாகிவிட்டது. ஏன், ஒரு சமுதாயத்தை மட்டிலும் சாடவேண்டும்? இந்த உலக இனம்தான் என்ன செய்தது?

தாளாப் பசி! தண்ணீருக்கு நீரில்லை! உடைக்கு வானம்! ஆம், இவைதான் இன்றைய கலைஞனின் உரிமை!

பக்கமாகச் சென்றுகொண்டிருந்த குதிரைவண்டியைக் கூப்பிட்டு என் வீட்டுக்கு அவரை எடுத்துச் சென்றேன்.

இரண்டு நாட்கள் அந்நிலைமையிலேயே இருந்தார். எனது வீட்டில் தனி அறையில் ஓய்வு எடுக்க வசதி செய்தேன்.

அவருடைய படங்களை நான் கண்டு கண்டு மகிழ்ந்தேன். அதில் ஒரு அழகான சித்திரம்!

## ஏனிங்கே?

*வியாபாரி --- எப்போதும் சுறுசுறுப்போடு பணியாற்றி வந்தவர் படுத்த படுக்கையாகிவிட்டார்!*

இறக்குந் தறுவாயில் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் அவரருகில் இருந்தனர். "பெரிய பையன் இருக்கிறானா?" என்று மெதுவாகக் கேட்டார், மனைவியிடம். "இருக்கிறான்" என்று பதில் வந்தது!

"மற்ற இரண்டு பையன்களும் . . . ?"

"இதோ, இருக்கிறார்கள்" என்றாள், மனைவி, அவர்களைச் சுட்டிக் காட்டியபடி.

*வியாபாரி திடீரென்று எழுந்தார்---உரத்த குரலில் கேட்டார் "அப்படியானால், கடையை யார்தான் கவனித்துக் கொள்கிறார்கள்?" என்று!*

மனிதன் நாயுடன் போராடும் கண் கொள்ளாக் காட்சி! கருத்துப்பேழை! மனித இனத்தின் முடிவற்ற வாழ்க்கைப் போராட்டம் அங்கு மிகவும் அழகான முறையில் தீட்டப்பட்டிருந்தது.

அச்சாணி மண்டபத்தில் இருந்து கொண்டு வாழும் மனிதர்களின் மத்தியில் கூடிவாழும் ஓர் மிருகத்தின் உரிமையினையும், சாதாரணமாக உலகில் மனிதனுகப் பிறந்து வாழும் ஒருவனுக்கு உள்ள உரிமையையும் அங்கே கண்டேன்.

வாழ்க்கை முழுதும் போராட்டக் களமாக இருக்கிறது என்பதை அங்கு பார்த்தேன். எச்சில் இலைக்கு எங்குமிருந்தும் உரிமை கொண்டாடும் இனப்போட்டி நிறைந்த காட்சியைக் கண்டேன்! கவலை என்னுள்ளத்தில் குடிபுகுந்தது.

உரிமை என்பது கண்கள் கட்டுண்டு கானகத்திலே விடப்பட்ட மனிதனின் நடைபோலும்! போராட்டம் நடத்தியே தான் உரிமையினைப் பெறமுடியும் எனச் சிலருக்கு மட்டும் அசாதாரண சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருப்பது பெருங் குற்றம் அல்லவா?

நான்கு நாட்கள் கழிந்தது. அவர் சிறிது கண் திறந்து பேசலுற்ருர். அவரைப்பற்றி அறிந்துகொள்ள விரும்பி, அவரின் அறைக்குச் சென்றேன். "ஐயா" மெதுவான குரலில் அழைத்தேன்.

எனைப்பார்த்தார். களிப்புடன் புன்முறுவல் பூத்தார். நன்றிப் பெருக்குடன் கைகாட்டி எனை உட்கார அனுமதித்தார்.

"உங்களை நான் அறியலாமா" நான் கேட்டேன்.

"என்னிடம் இப்பொழுது என்ன கேட்கப்போகிருய்? நான் மரணவாயிலின் முன் நிற்கின்றேன்."

"உங்களை மரணம் நெருங்காது"

"என் உயிர்த் துடிப்பில் களங்கம் இல்லை. அதனுல் நான் மாளத் துடிக்கிறேன். இனிமேலும் நான் வாழ்ந்தால் தீமைகள் செய்வேனே என்கிற பயமும் அதிகரிக்கிறது."

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்"

"தம்பி, வாழ்க்கை என்பது பலம் பொருந்திய இரும்புக் கட்டியைப் போல. உடற்பலமும், உளப்பலமும் கொண்டு உலகமென்னும் மலைமீது உருட்டிச் செல்லவேண்டும். அதில் சிலர் வெற்றிமுடி அடைவர். சிலர் தோல்வி எனும் பள்ளத்தே வீழ்வர். நான் வாழ்வில் தோற்றவன்."

"நீங்கள் ஓர் கலைஞரல்லவா?"

"தம்பி, கலைஞன் சாதாரணமான மனிதர்களைவிட மேம்பட்டவன் தானே?"

"நிச்சயமாக."

"ஆனுல், நான் சாதாரண மனிதரிலும் கீழ் உள்ளவன்."

"நீங்கள் ஏன் சிறக்கவில்லை?"

உலகம் சிந்திக்கவில்லை. சமுதாயம் கண் திறக்கவில்லை, அதோடு நான் ஓர் பிரமச்சாரி, மேலும் நான் ஓர் அநாதை"

"இதனுல் என்ன குறை வந்து விடும்?"

"கலைஞனுக்கு இதெல்லாம் தேவையில்லையா?"

"தேவைதான்."

"ஓவியம் என்னைக் காதலித்தது போல் பெண் வர்க்கம் என்னைக் காதலிக்கவில்லை. மணமும் செய்யவில்லை. இளமையில் வைராக்கிய சீலனுனேன். கலை வளர்க்கும் சிந்தனையாளனுக மாறினேன். கலையின் வாழ்வுக்கு என் வாழ்வை ஒப்படைத்தேன். எனை மணக்க ஒருவரும் வரவில்லையே என்ற கவலை மறைந்தது. சாதாரண மனிதனுக நான் இருந்திருந்தால், என்னை யாராவது மணந்திருப்பர். ஓவியனைப்பற்றிப் பெண்ணுள்ளம் தப்புக் கணக்கு இட்டது. அதை நினைத்து இப்போது சிறிது கவலை, அவ்வளவுதான்."

"அதை ஏன் இப்பொழுது எண்ணிக் கவலைப்படுகிறீர்கள்?"

"இல்லறம் என்றுல் வெறுக்கப்பட்ட அப்போது என் நெஞ்சம் ஒரு குறிக்கோளைக்கொண்டது. சிறந்த ஓவியங்களை வரைந்து அதன்மூலம் கலையைப் பெருமையடையச் செய்வதே! கலையால் சிறப்புற்று உயிர் துறக்க எண்ணினேன்."

"உங்களுக்குப் புகழில் விருப்பம் இல்லையா"

"எல்லோரும் புகழவேண்டும் என எண்ணியது கிடையாது. கலை மேம்பாடு அடைந்தால் போதும். உலகம் கலையினுல் உயரவேண்டும். இதற்கு முயற்சிகள் செய்தேன். அது வெள்ளம் கொண்டு சென்ற துரும்பானது. சமுதாயத்தில் கீழாக்கப்பட்டேன். அதனுலேதான் இள்மைக்குச் சென்று எண்ணுததை எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கண்ட கனவு நிறைவேறியிருந்தால் இல்லறத்தில் நான் தோற்றதை இப்பொழுது எண்ணியிருக்கமாட்டேன். உலகில் ஒவ்வொரு மனிதனும், ஒன்றிலாவது சிறந்து விளங்கவேண்டும்."

"உலகம் விசித்திரமாகப் போகிறது."

"உண்மை; நான் இல்லறத்திலும் சிறக்கவில்லை. கலைஞன் என்ற பாணியிலும் சிறக்கவில்லை. எப்படி உலகு விசித்திரம் அற்றது என்று கூற முடியும்?"

"உலகம் இறந்தவனைப் போற்றும்! இருக்கையில் தூற்றும்"

"அது குருட்டுக் கொள்கை' செத்தவன் அதை விரும்புவதில்லை"

"உங்களின் சுவர் சித்திரம் எதன் அடிப்படையில் எழுந்தது?"

"குழந்தையின் கரு குடிசையிலும் குபேரன் இல்லிலும் உருவாகலாம். பிறந்த குழந்தை ஏழையாய் இருந்தாலும், பணக்காரனுக இருந்தாலும், அதன் இளமையிலும், வாலிபத்திலும், முதிர்ச்சி அடைந்த வேளையிலும் இன்பத்தையே நாடுகிறது மூன்று பருவமும் முக்கியம் மனித வாழ்வில் ஆகையால், இன்றுள்ள மனிதர்களை நாம் நோக்குகையில் எனது எளிமைச் சித்திரத்தில் இருந்தவர்களைப்போலத் தான் அநேகர் இருக்கின்றனர். உலகுக்கு அதைக் கூறவேண்டும் என எண்ணினேன். அதற்கு வழி இது தான் என்று பட்டது. அதையே செய்தேன். கடைசியாக உலகுக்குச் செய்தது அதுதான்..." கூறிக் கொண்டே நெஞ்சைப் பிடித்தார். மார்பு வலி என்ருர். நான் மருத்து வரை அழைக்க ஓடினேன். வீடுவந்து அடைவதற்குள் மரணவாயிலின் உள் நுழைந்தார்.

கலைஞர்கள் ஓர் பொதுநலவாதியாக இருப்பார்கள் என்பதைச் சுவர் சித்திரத்தின் மூலம் காட்டினுர். அவர் இட்டுச் சென்ற ஓவியங்கள் என் சுயநலத்துக்காகப் பயன்படவில்லை. ஏராளமான பிரதிகளை அதன்மூலம் தயாரித்து இன்றும் அழியாத கலை நினைவை ஏற்படுத்தி உளேன். அழியாத நினைவுச் சின்னங்களாக இன்று அவைகள் பல இல்லங்களில் இலங்குகின்றன!

# தை பிறந்தால் வழி பிறக்கும்

மு. தமிழ்நாகன்

அதோ தெரிகிறதல்லவா, ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தின் ஆயர்சேரி. அங்கே எங்கு நோக்கினும் ஓலை வேய்ந்த கூரை வீடுகளைத்தான் காணமுடியும். வீட்டை ஒட்டினாற்போன்று மாட்டுத் தொழுவங்கள். அங்கே தாவணிகளால் தறிகளில் கட்டப்பட்டிருக்கும் குண்டுக் கல்லைப் போன்ற எருமைகளைப் பாருங்கள்.

உருண்டு திரண்டு பருத்த உடம்பின்மீது அடுப்புக் கரியை அரைத்துப் பூசினாற் போன்ற நிறம்; உடலுக்கு ஏற்ற நீளமான தலை. அங்கு தங்கு தடையின்றி வளர்ந்த கொம்புகள் விலாப்புறத்தை நோக்கி வளைந்திருந்தன. ஆயர்சேரி வாழ் அருங்குணப் பெருமக்களின் அரும்பெரும் சொத்தே அவைகள் தானே! அக்கார் ஆனினங்கள் ஈயும் இனியதீம் பாலுக்குச் சொல்லொணாத் தேவை இருந்தது அன்றைய நகர்ப்புறக்களில். 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்ற பழமொழி அன்றைய ஆயர்சேரியின் பாலைப் பொறுத்தவரை பொருளுடையதல்ல. ஏனெனில், அந்த அளவுக்கு வெறுத்தொதுக்க முடியாத — உவட்டாத இன்சுவை அளிப்பது.

அங்குள்ள மக்கள் எவ்வளவு சுறுசுறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள்! வேலையின்றி ஒரு நாள் ஒரு பொழுதுகூட அவர்கள் வெட்டியாக வீண்பொழுது போக்கியது கிடையாது. சுட்டித்தனமுள்ள சிறுவர்களின் புத்துணர்ச்சிக்கு ஒரு எல்லையே இல்லையெனலாம். புலிக்குப் பிறந்தவை பூனையாகுமா? எறும்பும், தேனீயும்கூட உழைப்பில் அவர்கள் முன் தலைதூக்க முடியாது. குணதிசையில் கொதித்தெழுந்து, இக்குவலயத்தின் இருள் நீக்க, மருள்கொள்ளும் வாயுடை வெங்கதிரோன் வெம்மைநிறைப் பகற்பொழுதை உமிழ்ந்து, இவ்வியனுலகை விளக்கி வைத்த வேளையிலிருந்து, பார்க்கும் வெளியெல்லாம் பகலவனொளியாய் மின்னிய பகற்பொழுதை பையவே விழுங்கியவண்ணம் விரிகதிரோன் வெற்பை அடையும் வரை அவர்கள் உழைக்கிறார்கள்—பொருளீட்டுகிறார்கள்.

தனக்கு முன் எழுந்து தளர்வின்றித் தொழில் புரியும் ஆயர்குலப் பெருமக்களின் பெற்றியை எண்ணி, நாணி அனைவரும் தொழில்புரியச் சேரியை விட்டு அகன்றுவிட்டனரோ, இல்லையோ என்ற ஐயத்துடன் கதிரவன் மெதுவாகக் கீழ்திசையில் தலையை உயர்த்துகிறான். திடுமென எழுந்துவிட்டால் அங்கிருந்து இன்னும் அகலாத ஆன்ற பெருமக்கள் தன்னை நோக்கி நகைப்பர் என்ற எண்ணம் அவனுக்கு. ஆம். அந்த நாணத்தினால் தான் அன்று அவன் அடங்கியே இருந்தான்.

ஆனால், ஆயர்குலச்சேரி ஆதவன் ஒளிபெற்றதேபோல் விளங்கியது. புத்துணர்வு பெற்றது. பொங்கிவரும் புதுநிலவைப் போன்ற ஒளிமுகமும், காதல் மருந்தளிக்கும் கன்னல் கனியிதழும், இன்னபிற பண்புடைய காதற்கினியாளுடன் இளமை ததும்ப — எழில் ததும்ப— காதல் ததும்ப கண் துயின்ற காதலர்கள் கண் விழிக்கிறார்கள். காலைக் கடன்களை முடித்துக் காரியம் இயற்றத் தொடங்குகிறார்கள். காரிகையர் கைச்செம்பில் கார் ஆனினத்தின் தீம்பாலைக் கறந்து வருகிறார்கள். இல்லத்தின் கடமைகளை இனிதே முடிக்கிறார்கள்.

ஆயர்சேரி விழித்து அரை நாழிகையாகி விட்டது. ஆனால், பொழுது விடியவோ இன்னும் ஒரு யாமம் உள்ளது. அதற்கிடையில் அங்கே கேட்கும் ஒலிகளோ ஓராயிரம். இதோ ஒரு வீட்டில் புலி முழக்கத்தைப் போன்று கேட்கின்றதே! ஆமாம். வாருங்கள், என்னவென்று சென்று பார்ப்போம். தாழ்ந்த கூரை! தலையில் இடித்துவிடாமல் மெதுவாகக் குனிந்து வாருங்கள். ஐயோ! ஏமாந்துவிட்டீர்களே! புலியா உறுமுகிறது? இடைக்குலக் குறுமகள் மத்தினால் தயிரை அல்லவோ கடைந்துகொண்டிருக்கிறாள். இளமகள் அல்லவா, அத்துணை ஆற்றலோடு கடைகிறாள். திரண்ட வெண்ணெயை எடுத்துச் சட்டியில் தனியே வைக்கிறாள். என்ன? எதைக் கண்டுவிட்டீர்கள், கற்சிலைபோல நிற்கிறீர்களே! ஏன்? ஓகோ! மத்தினால் கடையும்பொழுது அசையும் மங்கையின் அங்க அழகைப் பார்த்து மலைத்து நின்றுவிட்டீர்களோ! சரி வாருங்கள்; செல்வோம். இனியும் இங்கு நிற்பது நல்லதல்ல. இன்னும் சிறிது நேரத்தில் அவள் வெளியே கிளம்பிவிடுவாள்.

இதற்குள் கதிரவனும் தன் கதிர்க் கரங்களை நீட்டிக் கண்துயிலும் சிறுவர்களைத் தொட்டெழுப்பினான்! அவ் இளம்பிஞ்சுகள் முறுக்குடன் எழுந்

தன. தம் கடமைகளை முடித்தனர். மறுகணம் அவர்கள் நின்ற இடம் மாட்டுத்தொழுவம். பாலைக்குடித்துக் கும்பி நிரம்பியதால், வேலைத்திரையைப்போல் துள்ளிக் குதிக்கும் கன்றுகளைத் தாம்புக்கயிற்றால் கட்டினர். தீம்பாலைத் தரும் காரெருமைகள் மாலையிலே மடிகனக்கத் திரும்ப வேண்டும்; மனைவந்து மிகுதியாகப் பாலைப் பொழியவேண்டும் என்பதற்காக மேய்புலத்திற்கு ஓட்டிச்செல்ல ஆரம்பித்தனர்.

மிதிவண்டி ஓட்டுபவன் இருக்கையில் அமர்ந்துகொண்டு, கைப்பிடியைப் பிடித்தவண்ணம் கம்பீரமாகச் செல்வதுபோல, ஊர்ச்சிறுவர்கள் அனைவரும், மேய்புலத்திற்குச் செல்லும் எருமைகளின்மீது வளைந்த அதன் இரு கொம்புகளையும் இரு கைகளால் பிடித்தவண்ணம் ஒய்யாரமாக அமர்ந்து சென்ற காட்சியும், காலைக் கதிரவனின் மாட்சியும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஊரைவிட்டுச் சிறுவர்கள் வெகு தொலைவில்சென்றுவிட்டனர். அதற்குள் ஆயர்சேரியில் நாம் கண்ட இளமகள் நகர்ப்புறத்திற்கு மோர் விற்கப் புறப்பட்டுவிட்டாள். கார்முகில் போன்ற கருங்கூந்தலை வாரி முடித்து இடப்பட்டகொண்டை—காதிலே குழை – தலையின்மீது பூஞ்சுமடு — அதன்மேல் மோர்ப்பானையுடன் வெண்ணெய்ச்சட்டி, இவற்றுடன் முளையிள ஞாயிற்று இளவெயில் எறிப்ப, தன்கோலக் கலாபம் விரித்து ஓர் இளமயில் அசைந்து செல்வதைப்போன்று, தன் செம்மலர்ச் சீரடிமேல் சிலம்பு கிடந்து புடைப்ப; அவள் நடை கற்பதென நடந்து சென்றாள்.

அன்னம்போல அசைந்துசென்ற அவள், இன்னும் ஆயர்சேரியைக் கடக்கவில்லை. ஆள் நடமாட்டமும் அதிகமாக இல்லை. மார்கழிப் பனியால் மண்ணெல்லாம் தண்மையாக இருந்தது. ஆதலால் அவள் நடையிலே வேகமில்லை. சிறிது தொலைவு தான் சென்றிருப்பாள்; ஆள் அரவம் இல்லாததால் அச்சமின்றிச் சென்ற அவள் சீராளன் ஒருவனைத் தன்முன் எதிர்க்கண்டாள். அவளது 'ஆணமை'யெல்லாம் பறந்தோடிவிட்டது. நாணம் குடிகொண்டது. நொடிப் பொழுதில் அவனும் அவளை நெருங்கிவிட்டான். இருவரும் நோக்கினர். சொல்லமுடியாத வெட்கம் அவளுக்கு. இருப்பினும் அவனை 'மீண்டும் நோக்கவேண்டும்' என்ற ஆவல் அவளது உள்ளத்தில் ஒரு மூலையில் கிளைத்தது. ஒருமுறை அவனைத் தன் மனத்தராசில் எடை போட்டாள்.

வலக்கையிலே தடி — இடக்கையிலே கோடரி—தழும்பேறிய தோள்—அகன்ற நெற்றி—பரந்த மார்பு—தலையிலே சூடிய கதம்பமாலை—எடுப்பான தோற்றம் — துடிப்பான பார்வை. ஆம், பார்வை பட்டதும் பாவை பதைத்தாள். கண்கள் நான்கும் கவ்வின; கதைகள் பேசின. காதல் சுரந்தது. குறுமகள் நிலம் நோக்கினாள். நிமிர்ந்து நிற்கும் துணிவு அவளுக்கில்லை; நாணம் தடைபோட்டது. அப்பொழுதுதான் சிம்மநடைபோட்டுச் செல்லும் செருப்புத் தழும்பேறிய அவனது கால்களைக் கண்டாள், நிமிர்ந்தே நோக்கவில்லை. தானும் வழிதொடர்ந்தாள். தலைவனும் பிரிந்து சென்றான்.

நாட்கள் பல நகர்ந்தன. மார்கழி மறைந்து. தரணியை வாழ்விக்கத் தை பிறந்தது. நெய் மழையெனத் தை மழை பெய்தது. தண்ணீர்ப் பெருக்கு தரையெங்கும் ஓடியது. தடாகங்கள் நிறைந்தன, தாமரைகள் நீந்தின. செடிகள் சிலிர்த்தன; தருக்கள் தழைத்தன. மரங்கள் பழுத்தன; கிளிகள் வந்தன. கொடிகள் பழுத்தன; அணில்கள் வந்தன. கூவும் குயில்—கீச்சிடும் குருவிகள்—மேயும் கோழிகள்—அகவும் மயில்கள், அனைத்தும் மகிழ்ந்தன. கனிகளைத் தின்று களித்தன பறவைகள். வயல்கள் நிரம்பி வாய்க்காலில் நீரோடியது. பொய்கை வழிந்து பொட்டல் நிரம்பியது. பசும்புற்கள் வளர்ந்து விசும்பை நோக்கின. மாடுகள் மேய்ந்தன; ஆடுகள் அணத்தன. செந்நெல் செழித்தோங்கின. 'சூற்பசும் பாம்பின் தோற்றம்போல கருத்தாங்கிக் கதிரை ஈன்று, பேதை பெருஞ்செல்வம் பெற்றதேபோல் தலைநிமிர்ந்து, தெள்ளுதமிழ் நூற்களை நுண்ணுணர்வால் ஆய்ந்தறிந்து விள்ளும் அறிவுடைய ஆன்றோர்களைப்போல தலைகுனிந்து, மாநிலங் கூறும் மறைகேட்பது போன்று தரைமீது படுத்தன.

கன்னியர்களுக்கோ கரைகொள்ளாக் களிப்பு; காதலின் துளிர்ப்பு. தை பிறந்ததும் தவவுணர்வு அவர்களிடம் தலைதூக்கியது. அதாவது அன்புணர்வு அவர்களை ஆட்கொண்டது. கைப்பிடித்த காதலனுடன் காலமெல்லாம் களித்து வாழவேண்டும் என்ற அவர்களது உயர்ந்த அன்புள்ளத்தின் ஆற்றலையும், அதனால் உந்தப்பட்டு எண்ணிய வற்றைப்பெற அவர்கள் செய்யும் செயலையும் தவமெனச் சாற்றுதல் தகும். பண்டைத் தமிழகத்துக் காரிகையரின் தவவுணர்வால் உதித்ததுதான் 'பாவையர் நோன்பு.' இதைத்தான் தண்டமிழில் 'தைந் நோன்பு' என்பர். நோன்பு நோற்கும் நங்கையர் செங்கதிரோன் கிளம்புவதற்கு முன், நீலவிதானத்தின் நித்திலக் குவியலாய் ஒளிரும் விண்மீன்கள் புடைசூழத் தண்ணிலவோன் பவனிவரும் அவ்வேளை, தோழியர்களுடன் தண்கயத்தில் இறங்கி, தளிர்க்கரம் ஏந்தி, தனது அருட்படைப்பு ஒவ்வொன்றிலும் ஆண் பெண் உறவை மிளிரச் செய்த இயற்கையன்னையின் இன்னருளைப் பெற—தன் கண்ணாளன் கைகூட

## போர்க்களமே மேல்!

படைத் தளபதி ஒருவருக்கு, இலண்டன் நகரத்தில் விருந்து தரப்பட்டது.

அவருக்கு அருகில் அமர்ந்திருந்த ஒரு நண்பர் கேட்டார் "போரில் ஈடுபட்ட உங்களுக்கு, அமைதியான இந்த நகர வாழ்க்கை எப்படியிருக்கிறது?" என்று!

"இந்த வாழ்க்கையைவிடப் போர்க்களமே எவ்வளவோ பரவாயில்லை" என்றார் தளபதி.

"ஏன்?" ஆச்சரியம் கலந்த குரலில் கேள்வி எழுந்தது!

"போர்க்களத்தில், எதிரி யாரென்று, அவர்களது உடையிலிருந்து சுலபமாகப் புரிந்துவிடுகிறதே"---இது தளபதியின் பதில்!

இறைஞ்சுவர். தங்கத் தமிழில் இதனை 'தைந்நீராடல்' என்பர். நாடு நலம்பெற — வீடு விளக்கம் பெற— கொற்றவன் வாழ—உற்றவர் சிறக்க —மற்றவர் மகிழ—பெற்றவர் பேறு பெற நீராடலை மேற்கொள்பவர் பலருண்டு.

இவ்விதம் ஆயர்சேரியின் அனைத்து உயிர்களும் அகமிக மகிழ்ந்தன—ஆதவனை வாழ்த்தின—ஆனந்தம் கொண்டன.

ஆனால், அங்கே வாழ்ந்த ஒரே ஒரு உயிர் மட்டும் ஊசலாடிக் கொண்டிருந்தது — நடைப் பிணமாக அந்த ஆயர்சேரியில் உலவிக்கொண்டிருந்தது. அந்த உயிர்தான் ஆயர்குலக் குறுமகளைக் கவர்ந்த இளமகன். அன்று நடந்த சந்திப்புக்குப் பின், பின்னொரு தடவை நடந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவளை அவன் காணவில்லை — காண இயலவில்லை. அன்றிருந்து இனம்புரியாத—பெயர் தெரியாத நோய் ஒன்று அவனைப் பற்றிக்கொண்டது. அடலேறு போன்றிருந்த அவன் அரைமனிதன் ஆனான். சிம்ம நடை கம்மிவிட்டது. குறுகுறுத்த பார்வை சிறுத்துவிட்டது. தடந்தோள் தளர்வெய்தியது. 'உடைப்பெருஞ் செல்வம் உடைத்தென்ன?'' என எண்ணத் தொடங்கினான்.

இந்நிலையில் அவனது உயிர்ப் பாங்கன் அவனைக் கண்டான் — அதிர்ச்சி கொண்டான். ஓரிரு வாரங்களில் உருமாறியிருக்கும் தன் உயிர்த்தோழனை எண்ணி உளம் நொந்தான். அவனுக்கு உற்ற துயரை அறிய எண்ணி எவ்வளவோ உசாவினான். ஒன்றும் பயன் இல்லை. அவன் பெற்ற பதிலெல்லாம் இது தான்.

"என்னுடைய இழிநிலையைக் கண்டு வருந்தும் உன்னை என் உயிர்ப் பாங்கனாக பெற்றதே, நான் பெறற்கரிய பேறு. ஆனால் அதனினும், என்னுடைய கண்ணின் கருமணியை நீக்கிவிட்டு, கண்ணுக்கு கண்ணான ஓர் உயிருக்கு அங்கு அடைக்கலம்கொடுத்தேன். அந்த உயிர்தான் எனக்கு இந்நோயை கைம்மாறாகக் கொடுத்துள்ளது. காசினி எங்கும் தேடி அலைந்தாலும் நான்கொண்ட இந்நோய்க்கு மருந்தே கிடையாது. ஆதலால் என்னை எண்ணி நீ ஏன் வீணாக உழலுகிறாய்?''

பாங்கனுக்கு உடனே புரிந்துவிட்டது, நண்பன்கொண்டது காதல் நோய் என்று. அக்காதற்கினியாளைக் காண்பதுதான் அவனது அடுத்தவேலை. அதற்கு முன் காதலியின் பாங்கியைக் காண்பது. அல்லது, அவளறிய நண்பன் தன் நாவால் தன் உள்ளத்து ஆசையை வெளியிடச் செய்வதுதான் அவனது முதல் வேலை. இயன்றவரை அன்பனுக்கு ஆறுதல் கூறினான். காலைதொடங்கி மாலைவரை தோழனைக் கண்காணித்து வந்தான். கண் துயிலும் வேளை தவிர மற்றநேரங்களில் பற்றிச்செல்லும் பட்டுப் பூச்சிகளைப்போல இருவரும் பவனி வருவர்.

அன்றொருநாள் வைகறையில்— ஆதித்தன் அவனியில் ஆட்சி செலுத்தத் தொடங்கினான். செந்நிறக் குழம்பை அடிவானத்தில் அள்ளி வீசினான். வையம் பகல் பெற்றது; வானம் ஒளிபெற்றது. ஆயர்குலச் சிறுவர்கள் எருமைகளை மேய்புலத்திற்கு ஓட்டிச்சென்றார்கள். ஆருயிர்த் தோழனை அருகணைத்துக் கொண்டு அன்புப்பாங்கனும் அணித்தே சென்றான். அவன் எண்ணமெல்லாம் நண்பனின் துயர் நீக்கும் நங்கையைக் காண்பது.

ஊரைவிட்டுச் சிறிது தொலைவு சென்றிருப்பர். ஊரை அண்மித்த நிலையில் குற்றுயிராய்க் கிடந்த குளம் இன்று குதூகலித்தது. அன்று வைகறையில் அழகுக்கு அழகு செய்யும் ஆரணங்குகளை ஆலிங்கனம் செய்துகொண்டிருந்தது. தைந்நீராட வந்திருக்கும் 'கிணைமகளிரின்' கணைவிழிகளைக் கண்டு நீலமலர்களும், தங்கத் தாமரைகளும் இதழ்கூப்பி நின்றன. எத்தனையோ காட்சிகள் கண்களுக்கு விருந்தூட்ட இருவரும் குளத்தைக்கடந்து சென்றுகொண்டிருந்தனர். அப்பொழுது 'களுக்' கென்ற சிரிப்பொலி கேட்டுத் திரும்பிப் பார்த்தனர். இளமகன் உள்ளம் குளமாகியது—இன்பம் அதில் மிதந்தது. ஆம். தோழியர் புடைசூழ குறுமகள் அங்கே நின்றுகொண்டிருந்தாள். திடீரென்று நண்பன் முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சியையும், சிரிப்பொலிகேட்ட திக்கில் குளத்தில் நின்றுகொண்டிருந்த கன்னியர்களையும் கண்டதும் பாங்கனுக்கு நண்பனிடம் பலகேட்கவேண்டும் என்ற ஆவல் தோன்றியது.

"ஏனப்பா! என்ன செய்தி? இத்தனை நாள் இல்லாத முகமலர்ச்சி இன்று இப்பெண்களைக் கண்டதும் உனக்கு ஏற்படக்காரணம் என்ன?''

"காரணம் உண்டு. அதோ காதில் குழையுடன், தோழிகளாலும் வெட்கத்தாலும் சூழப்பட்டு, தளிர்கரம் நீட்டி நிற்கும் அத்தையலாள்தான், 'தேன்கலந்து — பால்கலந்து — செழுங்கனித் தீஞ்சுவை கலந்து— ஊன்கலந்து — என் உயிர்கலந்து' —காதல் நோய் அளித்த காரிகை யாகும்.''

"அப்படியா! உன்னை நோக்கி ஏன் கை நீட்டுகிறாள்?''

"அதையும் கேள். அன்றொரு நாள் மாலை. நகர்ப்புறத்திலே மோர் விற்று நெல்லைப் பெற்றுக்கொண்டு, அல்லிக்கொடி போல அவள் அசைந்து வந்துகொண்டிருந்தாள். அப்பொழுது நான் அச்சமின்றி அவளை அணுகி, என் அன்பின் அறிகுறியாக தழையும் தாரும் கொடுத்தேன். அவளும் அதனை மறுக்காது ஏற்றுக்கொண்டாள். அதன் பிறகு அவளை நான் சந்திக்கவேயில்லை. அந்தத் தழையும் தாரும் கொடுத்தவன் நான்தான் என்று இப்பொழுது அவள் தன் தோழியரிடம் கூறுகிறாள்.''

## பொறுப்பு....!

வேலை தேடி வந்த இளைஞரிடம், அந்தக் கம்பெனிப் பொறுப்பாளர் கூறினார் "எங்கள் கம்பெனியைப் பொறுத்தவரை, பொறுப்பானவர்களைத்தான் நாங்கள் வேலைக்கு எடுத்துக்கொள்வோம்''

இளைஞர் "அப்படியானால் நான் மிகவும் தகுதியுடையவன்தான்'' என்றார் அழுத்தந் திருத்தமாக!

"எப்படி?''

"பாருங்கள், நான் இதுவரை ஐந்து கம்பெனிகளிலே வேலை பார்த்திருக்கிறேன். அங்கெல்லாம் எந்தத் தவறு நடந்தாலும், நானே பொறுப்பு என்று சொல்லியிருக்கிறார்கள்!''

★

"என்னிடம்கூட இதுவரை இதை நீ சொல்லவேயில்லையே"

"அன்றுதான் எல்லாம் விளக்கமாகச் சொன்னேனே. அதோ... தூரத்தில் வருவது அவளது பாங்கி மாதிரி தெரிகிறது."

நண்பனுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. எப்படியாவது இதை அவளது செவியில் விழச் செய்ய வேண்டும் என அவள் அருகில் வரும்வரை பேச்சை வளர்த்தான்.

"ஒருத்தியைச் சந்தித்தேன்; உள்ளத்தைப் பறிகொடுத்தேன் என்று சொன்னாயே ஒழிய, உடுக்கத் தழையும், சூட மாலையும் கொடுத்ததைக் கூறவில்லையே."

"இப்பொழுதுதான் கூறிவிட்டேனே."

"அது சரி. தவமிருந்து நோன்பு நோற்பவர்களல்லவா தைமாதக் குளத்தில் நீராடுவர் என்று சொல்லுவார்கள். இவள் எதற்காகத் தவமிருந்தாள்? யாருக்காக நோன்பு நோற்ருள்?"

"அப்படிக் கேள். காதலுக்காகத் தவமிருந்தாள். காதல் நிறைவேற நோன்பு நோற்ருள்."

"காதலாவது, தவமாவது! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே!"

"உனக்கு எதுதான் விளங்கியது?"

"கேலி வேண்டாமப்பா. விளக்கத்தைச் சொல்."

"காந்தத்துக்கும் இரும்புக்கும் உள்ள தொடர்பே, காதலுக்கும் பாவையர் தவத்துக்கும் உள்ள தொடர்பு!"

"உன்னிடம் உவமை கேட்கவில்லை. உள்ளத்தைப் பறிகொடுத்தவள் உண்ணாவிரதம் இருக்கக் காரணம் என்னவென்றுசொல்?"

"நிறைய உண்டு. தவத்திற்கு அடிப்படை அன்புதானே. அன்பு முதிர்ச்சியே தவத்தின் ஆணிவேர். அனிச்சமும், அன்னத் தூவியும் கூட அடிக்கு நெரிஞ்சிமுள்ளாகக் குத்துகின்ற அளவுக்கு மென்மையுடைய மாதரிடம் இத்தவப் பண்பு அமைந்திருத்தல் இயல்பே."

"தவத்தின் பயனை வீட்டிலிருந்து கொண்டுபெறுவதுதானே. வைகறையில் வாட்டும் குளிரில் குளத்தில் இறங்கி நிற்பானேன்."

"நீ ஒரு கிணற்றுத் தவளைதான். இதுகூடத் தெரியாதா உனக்கு! தைத்திங்கள் தண்கயத்தில் இறங்கித் தரணியைச் செழிக்கவைக்கும் இயற்கையன்னையின் இன்னருளைப் பெறுபவர்கள், எண்ணிய எண்ணம் நிறைவேறும். அன்று நான் அவளுக்குத் தழையும் தாரும் கொடுத்தேனல்லவா? தடுக்காமல் ஏற்றுக்கொண்டாள் அல்லவா? அப்படியெனில் நான் அவளைக் காதலிக்கிறேன் என்று தெரிந்துகொண்டாள் அல்லவா?...."

"இப்பொழுது தடாகத்தில் இறங்கித் தவம் செய்கிருள் அல்லவா...?"

"ஆம், என்னைப் பெறும்பொருட்டுத் தைமாதக் குளத்தில் நீராடி இயற்கையை வேண்டுகிருள்."

இதற்குள் பாங்கியும் நெருங்கி விட்டாள்.

"அப்படியானல் உன் முடிவு."

"நான் அவளைக் காதலிக்கிறேன். அவளும் என்னைக் காதலிக்கிருள். என் பொருட்டு நோன்பு நோற்கிருள். இத் தவத் திருமகளை என் காதற் கிழத்தியாகப் பெறுவதற்கு நான் என்ன தவம் செய்திருக்க வேண்டும். நான் உற்ற நோய்க்கு--- இவள் கொடுத்த நோய்க்கு இவளே மருந்து. தரணியெங்கும் தேடினாலும் இத் தவக்கனியைப் போன்ற மருந்து பிறிதொன்றில்லை."

பாங்கியும் அவர்களைக் கடந்துவிட்டாள். தலைவனது சொற்கள் அவளது செவியில் விழுந்திருக்கும்.

"இனிமேல் எனக்குத்தான் வேலையென்று சொல்"

"ஆமாம். ஆமாம். இனி உன் பொறுப்பு."

"அடடே! பேச்சுவாக்கில் வழி போனதே தெரியவில்லையே. மேய்புலமும் வந்து விட்டதே. நண்பா! கவலையை விடு. தைதான் பிறந்து விட்டதே. உறுதியாக உனக்கொரு வழி பிறக்கும்."

"ஆம். தை பிறந்தால் வழி பிறக்கும்."

வழி பிறந்ததா? பாங்கன் எண்ணம் பாங்காக முடிந்ததா? ஆயர்குலத் திருமகளை இளமகன் பெற்ருனு? என்பன போன்ற வினுக் கணைகளை புலவர் பூதன் தேவனுர் மீதே தொடுப்போம்; விடை பெறுவோம்.

"மன்ற எருமை மலர்தலைக் காரான்
இன்தீம் பாற்பயம் கொண்மார் கன்று விட்டு
ஊர்க்குறு மாக்கள் மேற்கொண்டு கழியும்
பெருய்புலர் விடியலின் விரைப் பிப் போத்தந்து
தழையும் தாரும் தந்தனன் இவன்என
இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோட் குறுமகள் அல்லது
மருந்துபிறி தில்லையான் உற்ற நோய்க்கே,

(நற்றிணை. 80)

# நீரில் மூழ்கிய கார்களை எடுக்க வழி

நீரில் மூழ்கிய மோட்டார் கார்களை வெளியேற்றுவதற்காக ஒரு புதிய சாதனத்தை நெதர்லாண்ட்சில், உறீரன் வீன் எனுமிடத்தி லுள்ள ஒரு சர்வதேச வர்த்தக கம்பெனி கண்டு பிடித்துள்ளது. நீரில் மிதக்கும் பாலிதிலீன் கயிறு ஒன்று ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் அடைக்கப்பட்ட இச்சாதனம், கார் டிரைவர் ஆசனத்திற்குக் கீழே வண்டியின் சாசிசுடன் இணைக்கப்பட்டிருக்கும். $24\frac{1}{2}$ அடி ($7\frac{1}{2}$ மீட்டர்) நீளமுள்ள இக்கயிறு ஒரு இரும்பு வளையத்துடன் இணைக்கப்பட்டு மற்ருெரு பகுதி காரின் சாசிசுடன் பொருத்தப்பட்டிருக்கும்.

கார், நீரில் மூழ்கிவிட்டால் கயிறு கதவு அல்லது விண்ட்ஸ்கிரீன் வழியாக வெளிப்பட்டு நீரில் மிதப்பதை வைத்துப் பிரயாணிகளைக் காப்பாற்றிவிடலாம். சில சமயங்களில் கயிற்றின் துணைகொண்டே பிரயாணிகள் தப்பிவிடவும் கூடும். உறுதியான இக்கயிறு காரைத் தூக்கக்கூடிய சக்தியையும் பெற்றதாக உள்ளது.

# ஊரார் உரையாடல்

## ஒற்றன்

**துடிதுடிப்பான்:**

தாத்தோவ்' தாத்தா! தெரியுமா விஷயம், ஓடருன் விழுந்தடிச்சிகிட்டு, பயந்தாங்கொள்ளிப் பய; பெரிய வீரப்புலி மாதிரி சீறுவானெல்லோ முன்னேல்லாம், இப்பப் பாரேன், கப்சிப்னு ஆயிட்டான், பயத்தாலே ஆசாமி நடு நடுங்கிப் போயிட்டான், ஓடருன் ஓட்ட ஓட்டமா......

**பழிதுடைப்பான்:**

டே! கோலிகுண்டு! சும்மா மளமளன்னு பேசினு, விஷயம் புரியுமா—ஓடிட்டான்–பயந்தாங்கொள்ளிப் பய–அப்படி இப்படின்னு பொரிஞ்சித் தள்ளறியே. நின்னு நிதானமாச் சொல்லுடா......யார், எப்ப, ஏன், எங்கே ஓட்ட ஓட்டமா ஓடருன்?

**துடிதுடிப்பான்:**

போ, தாத்தா! நீ எப்பவும் இப்படித்தான், உனக்கு ஒண்ணுமே தெரியறது இல்லெ......

**பழிதுடைப்பான்:**

ஏண்டா பொடியா! நீ, என்ன புரியற மாதிரியாவாச் சொல்றே. யாரையோ பயந்தாங்கொள்ளி, ஓடருன் என்று சொன்னு என்ன புரியுது. யார், என்ன, எங்கே...?

**துடிதுடிப்பான்:**

அவன்தான் தாத்தா! அசகாயச் சூரனுட்டம் பேசிகிட்டு இருந்தானே. நான் எதுக்கும் பயப்படமாட்டேன், சிங்கம் புலி கரடி எதுவா இருந்தாலும் எனக்குத் துளி கூடப் பயம் கிடையாது என்றெல்லாம் பேசுவானே, அறிவூரான்......

**பழிதுடைப்பான்:**

அட, அறிவூரானைப் பற்றியா சொல்றே... ஆமாம், என்ன அவனைப்பத்தின சேதி?

**துடிதுடிப்பான்:**

ஓடருன் தாத்தான்னு, ஓட்டமா ஓடருன்......

**பழிதுடைப்பான்:**

யாரு? அறிவூரானு? ஓடமாட்டானே......

**துடிதுடிப்பான்:**

அப்படித்தான் நாம எல்லோருமே எண்ணிக்கொண்டிருந்தோம் தாத்தா! இப்ப, பய ஓடருன்......

**பழிதுடைப்பான்:**

டேய். சும்மா மரியாதையாப் பேசுடா, உன்னைவிட அறிவூரான் பெரியவண்டா, வயதிலே......

**துடிதுடிப்பான்:**

போ தாத்தா! இம்மாம் பயந்தாங்கொள்ளிக்கு மரியாதை ஒரு கேடா......

**பழிதுடைப்பான்:**

அட அவனுக்கு மரியாதை வரணும்னு இதைச் சொல்லலே......உனக்கு நாலு பேரோட மரியாதை கிடைக்கணும்னு, நீ மத்தவங்களை மரியாதையாப் பேசணுமே, அதுக்குச் சொன்னேன். உனக்கு இப்பப் புரியாது அதெல்லாம். இப்ப நீ பறக்கற காத்தாடி பரம பதம் போய்வரும்னு நினைக்கிற வயசுக்காரன். அதுகிடக்கட்டும். அறிவூரான், ஓடினுன் என்கிறயே, எப்ப......

**துடிதுடிப்பான்:**

சத்தம் கேட்டதும் ஒரே ஓட்டம்! பயம்.

**பழிதுடைப்பான்:**

ஓடினுன்னுகூட வைச்சுக்கோ, பயம்னு ஏன் அதைச் சொல்றே. வேறே ஏதாவது வேலே இருக்கலாம்......

**துடிதுடிப்பான்:**

அதெல்லாம் இல்லே, தாத்தா. பயம்தான். சத்தம் கிளம்பியதும், பிடிச்சானே ஒரே ஓட்டம்......

**பழிதுடைப்பான்:**

என்ன சத்தம் கிளம்பிச்சு......

**துடிதுடிப்பான்:**

டேய்! உன்னே விடப்போறதில்லே. ஒரே வெட்டா வெட்டிப் போட்டுவிடப் போறேன், வாயைத் திறந்தான்னு, கூச்சல் போட்டுகிட்டு, மீசையை முறுக்கிகிட்டுப் புறப்பட்டானும் சட்டநாதன்......

**பழிதுடைப்பான்:**

அதென்னடா, புறப்பட்டானும் சட்டநாதன்னு சொல்றே......நீ பார்க்கலியா கண்ணுலே......

**துடிதுடிப்பான்:**

நான் பார்க்காகிட்டி என்ன? பார்த்தவங்கதான் சொன்னுங்க, என் கிட்ட......

பழிதுடைப்பான்:

அப்படியா கதை! நீ பார்க்கலியா கண்ணுலே, சட்டநாதனை. கிடக்குது, போ. அவனைப் பார்த்தாயா, பயந்தாங்கொள்ளியை. அட, அவன்தாண்டா, அறிவூரான், அவனை.

துடிதுடிப்பான்:

நான் பார்க்கலெ, தாத்தோய்! பார்த்தவன் சொன்னான் என்கிட்ட, விவரமா......

பழிதுடைப்பான்:

அவன் யார் பார்த்தவன்?

துடிதுடிப்பான்:

குரலூரான்! தெரியாது! குரலூரான்!

பழிதுடைப்பான்:

நல்லாத் தெரியுமே; குரலூரான்! அவன்தான் பார்த்தானா, அறிவூரான் ஓடினதை......

துடிதுடிப்பான்:

ஏன், அவனுக்கு என்ன கண்ணு இல்லையா......

பழிதுடைப்பான்:

யார்டாப்பா, அப்படிச் சொன்னுங்க......கண்ணும் இருக்குது, கனத்த குரலும் இருக்குது. அதுகிடக்கட்டும். அறிவூரான் பயந்துகிட்டு ஓடினதை இவன் பார்த்து, உன் கிட்டச் சொன்னானா......

துடிதுடிப்பான்:

என்கிட்ட மட்டுமா! ஒவ்வொருத்தர் கிட்டவும் சொன்னான். பார்த்திங்களா, பார்த்திங்களா, இந்த அறிவூரானை, பெரிய அஞ்சாநெஞ்சன், என்றெல்லாம் பேசி வந்திங்களே, சட்டநாதன் கிளம்பிக் கூச்சல் போட்டதும், ஆசாமி கிடுகிடுத்துப்போய், விழுந்து அடிச்சிகிட்டு ஓடரான், பாருங்கன்னு சொல்ரான்......

பழிதுடைப்பான்:

பேசுவான், பேசுவான். அடேயப்பா, குரலூரானுக்குப் பேசவா தெரியாது......

துடிதுடிப்பான்:

நியாயம்தானே தாத்தோய்! அவன் சொல்றது...... சட்டநாதன் கிட்ட சிக்கிகிட்டா, பிழிஞ்சி எடுத்துவிடுவானே என்கிற பயம்தானே அறிவூரானுக்கு......

பழிதுடைப்பான்:

இருக்கும், இருக்கும்; அதைப் பிறகு விசாரிக்கலாம். இந்தக் குரலூரான் இருக்கிறானே, அறிவூரான் கோழை, சட்டநாதனைக் கண்டு பயந்து ஓடரான்னு சொல்ரானே, சொல்லிவிட்டு என்ன செய்தான்? அறிவூரான் பயந்து ஓடரான்—நான் அப்படி இல்லே—நான் அஞ்சாநெஞ்சன் ஒரு கை பார்க்கறேன்னு சொல்லி, சட்டநாதன் பேரிலே பாய்ந்தானா......

துடிதுடிப்பான்:

அவருக்கென்னா வந்தது, தலை எழுத்தா.

பழிதுடைப்பான்:

அதானே கேட்டேன். அவரு அந்த மாதிரி வேலைக்கெல்லாம் போகமாட்டாரே......

துடிதுடிப்பான்:

தாத்தோய்! சட்டநாதன் மிரட்டறது குரலூரானை அல்ல, அறிவூரானை......அதைப் புரிஞ்சுக்க......

பழிதுடைப்பான்:

அது புரியுதுடா பொரி உருண்டே! சட்டநாதனைக் கண்டு பயந்து ஓடரான் அறிவூரான் — அதைக் கேலி பேசற, குரலூரான், அறிவூரானைப் பார்த்துப் பயப்படாதே, நானும் இருக்கிறேன், வா, சட்டநாதனை ஒரு கை பார்ப்போம்னு சொல்லலாமே, சொன்னானா......?

துடிதுடிப்பான்:

இல்லை! ஏன் சொல்லணும்? அதான் வேலையா குரலூரானுக்கு......

பழிதுடைப்பான்:

ஆமாமாம்! அவருக்கு வேறே ஏகப்பட்ட வேலை இருக்கு; முதல்லே, அறிவூரான் கோழைன்னு சொல்லணுமே—உன்னுட்டம் பேர்வழிகளுக்கெல்லாம்......

துடிதுடிப்பான்:

சுத்தி வளைச்சிப் பேசாதே தாத்தா! அறிவூரான் ஓடலாமா, பயந்து.

பழிதுடைப்பான்:

கூடாது! பயந்து ஓடக்கூடாது — வேறே வேலை இருந்தா ஓடலாம், வேறே முறைதேட ஓடலாம்...

துடிதுடிப்பான்:

இது தத்துவம்...

பழிதுடைப்பான்:

ஏன், உனக்கு அது பிடிக்காதா! சரி, கிடக்கட்டும்; அறிவூரானைக் கேட்டா அவன் அதற்கு விளக்கம் சொல்லுவான். பிறகு பார்க்கலாம். வீரம் இல்லே அறிவூரானுக்குன்னு கேலி பேசரானே குரலூரான்; இவன், சட்டநாதன் கிளம்பிக் கூச்சல் போட்டதைக் கேட்டுப் பயந்துகூட இல்லா, அதுக்கு முன்னாலேயே, ஓடிவிட்டானேல்லோ, களத்தூர் எல்லையை விட்டுவிட்டு...

துடிதுடிப்பான்:

களத்தூர் எல்லையை விட்டுவிட்டுக் குரலூரான் போனது பயத்தாலா? கிடையாது. பிடிக்கல்லே, போயிட்டார்!

பழிதுடைப்பான்:

போயிட்டவரு, என்ன ஓயாமப் பேசிட்டுப் போரிட்டு, சட்டநாதன் போன்ற ஆசாமிகளை அடித்துக் கீழே தள்ளி, வெத்தி மாலையும் வீர கண்டாமணித் தோடாவும் வாங்கி வர்ராரா...

துடிதுடிப்பான்:

அது கேட்க, நீங்க யாரு...

பழிதுடைப்பான்:

அறிவூரானைப்பத்திப் பேச, நீங்க யாரு?

துடிதுடிப்பான்:

நாங்க, ஊராருக்குச் சொல்ரோம்.

பழிதுடைப்பான்:

சொல்லுங்க. சொல்லிவிட்டு, உங்களோட வீரத்தையும் காட்டி, சட்டநாதனை எதிர்த்து நின்னு, 'சபாஷ்' பட்டம்

கிடைக்கும்... அதைக் காணுேமே. சட்டநாதன் கிளம்பித் தானு அறிவூரானே மிரட்டவேணும்—அவன் என்ன அவ்வளவு பெரிய ஆளா? நான் போதுமே அவனே வீழ்த்த என்னே அனுப்புங்க; அறிவூரானே அடிச்சி விரட்டறேன்னு இதே குரலூரான் பேசிக்கொண்டு இருந்த விஷயம், கவன மிருக்குதா, உனக்கு.

துடிதுடிப்பான்:

ஆமாம். சட்டநாதன் கிளம்பத் தேவையில்லே; அறிவூரானே அடக்கிவிட முடியும் என்னுலேன்னுதான் பேசினுரு...

பழிதுடைப்பான்:

இவரு பேச்சை மதிச்சாங்களா? இவ்வளவு விவரம் தெரிஞ்சவரு சொல்கிறபோது, பயம் எதுக்கு; இவரே போதும் அறிவூரானே அடக்க என்று எண்ணினுங்களா? எண்ணியிருந்தா, சட்டநாதனுக்குத் தூபம்போட்டு, அறிவூரான் பேரிலே ஏவிவிடுவாங்களா?

துடிதுடிப்பான்:

நீ சொல்றது நெஜந்தான், தாத்தா!

பழிதுடைப்பான்:

அறிவூரானே அடக்க, குழிபறிப்பான், கொட்டடியான், வழக்கூரான், வம்பளப்பான், இப்படிப்பட்டவங்களே எல்லாம் முன்னே ஏவிவிட்டாங்களே, முடிந்ததா, அவர்களாலே அறிவூரானே ஒடுக்க? முடியல்லே! குரலூரான், குறும்பூரான், குடைச்சலூரான் இப்படிப்பட்டவங்களெல்லாம், சேர்ந்து அறிவூரானே ஒழித்துவிடுவதாகச் சொன்னுங்க. இவங்க பேச்சைத் துச்சம்னு நினேச்சி, அறிவூரானே அடக்க இவங்க போதாதுன்னு தீர்மானிச்சித் தானே, ஆட்சியூரான், சட்டநாதனே ஏவிவிட்டிருக்கான்? இதிலே இருந்து இரண்டு விஷயம் புரியுது. இல்லையா? ஒண்ணு குரலூரான் போன்றவங்களோட திறமையிலே ஆட்சியூரானுக்கு நம்பிக்கை இல்லே. மற்றது என்னுன்னு, அறிவூரானே அழிக்க, சாமான்யப்பட்டவங்களே அனுப்பினு பலன் இல்லே, சட்டநாதன்தான் கிளம்பணும் என்று ஆட்சியூரான் நினேக்கிருன்; அதாவது அறிவூரானுடை விஷயத்திலே ஆட்சியூரானுக்கு அவ்வளவு பயம். புரியுதா?

துடிதுடிப்பான்:

ஒரு விதத்திலே, உண்மைதான். சட்டநாதனே ஏவி விடறதுன்னு, மத்தவங்களாலே முடியல்லே அறிவூரானே அடக்கன்னுதான் அர்த்தம்.

பழிதுடைப்பான்:

போகட்டும்; அறிவூரானே அழிக்கச் சட்டநாதனே ஏவி விடத் தேவையில்லே, நாங்க போதும் அவனே அழிக்கன்னு பேசினுங்களே குரலூரான் போன்றவங்க, இப்ப, சட்டநாதனே ஏவிவிட்டிருக்கிறது பார்த்து, கண்டிக்கணுமேல்லோ? சொல்லணுமேல்லோ, அறிவூரானே அடக்க, சட்டநாதன் வேண்டாம்ங்க; நாங்க சல்லடம் கட்டியாச்சி, விடுங்க எங்களே, ஒரே தாக்குத் தாக்கி அறிவூரானே ஒழிச்சிக்கட்டரோம்னு, சொல்லணுமேல்லோ... சொல்லல்லே...

துடிதுடிப்பான்:

இப்படிப் புட்டுப் புட்டுக் காட்டினு புரியுது தாத்தா! முதல்லே, சட்டநாதன் கிளம்பவேண்டியது இல்லே, அறிவூரானே ஒழிக்கறது சாதாரண காரியம்னுதான் சொன்னுங்க. கேட்டிருக்கறேன். இப்ப, கண்டிக்கத்தான் காணேம்.

பழிதுடைப்பான்:

அதெப்படி கண்டிப்பாங்க! அதுக்கு முதுகெலும்பு வேணும்டோய், முதுகெலும்பு! கண்டித்துப் பேசினு, ஆட்சியூரான் அப்பம் பொரிகடலே கொடுக்கமாட்டானே! எதை மென்னு திங்கறது.

துடிதுடிப்பான்:

போங்க தாத்தா! ஒரே அடியாக் கேலி பேசறிங்க.

பழிதுடைப்பான்;

போகட்டும். அதோ பார்! அறிவூரான்தான் — பார்த்தயா... அதோ... தோப்புப் பக்கம்...கேணிகிட்ட...

துடிதுடிப்பான்:

ஆமா... கேணிகிட்ட என்ன செய்யருன்...

பழிதுடைப்பான்,

தண்ணி சேந்தருண்டா. தகரடப்பா!

துடிதுடிப்பான்:

எதுக்குத் தண்ணி சேந்தரான். அங்கே சட்டநாதன் மிரட்டருன் — பயந்து ஓடியாந்தான் — வந்து, தண்ணி சேந்தருனே...

பழி துடைப்பான்:

*அதோ, அந்தாலே பாருடா, அரை டிக்கட்டு! புகை தெரியுதா, பாரு!*

துடிதுடிப்பான்:

*தெரியுது! புகை! நெருப்புப் பிடிச்சிகிட்டுதா . . . ?*

பழிதுடைப்பான்:

*ஆமாம் . . . , தீ பிடிச்சிகிட்டுது எல்லேயூர் பக்கம் . . . அது பரவினு, இங்க, நம்ம மாடுமனே, மக்க கதி அதோ கதிதான். அதுக்காகத்தான், பலபேர், கிளம்பி, தீயை அணேக்க வேலே செய்யருங்க. அறிவூரான் அந்த வேலேதான் செய்யருன், அதுக்காகத்தான், ஓடியாந்தான்--- தீ அணேக்கிற வேலேயைக் கவனிக்க. அந்த நேரமாப் பார்த்து, தீ அணேக்கற வேலேயிலே ஈடுபட்டிருக்கிற சமயத்திலே, எதையும் பேசலாம், வம்புக்கு இழுக்கலாம் என்கிற எண்ணத்திலே சட்டநாதன் கொக்கரிக்கிருன். இவன், அறிவூரான் --- தெரியுமேல்லோ. அதனுலே நிலேமை புரியுது. இந்த நேரத்திலே, நமக்கு இருக்கற வேலே தீ அணேப்பது; சட்டநாதன் கூச்சலேச் சட்டை செய்யக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டு, தீயணேக்கற வேலேக்காக ஓடியாந்தான் இந்தப் பக்கம். அதை, பயந்தாங்கொள்ளித்தனம்னு சொல்றே . . . . சரி! உன் னுட்டம் இருக்கறவனுங்க, கிளப்பிவிடற பேச்சைக் கேட்டுவிட்டு, அறிவூரான், தீ அணேக்கற வேலேயை விட்டுவிட்டு, சட்டநாதன்கூட மல்லுக்கு நிற்கருன்னு வைச்சிக்க, அப்ப, இந்த வாய்---அதாண்டா உன்னுேட வாய்---என்னு பேசும் தெரியுமா! அட இந்த அறிவூரான் புத்திபோற போக்கைப் பாரு---எல்லேப் பக்கம் தீ பிடிச்சிகிட்டு எரியுது---அதை அணேக்கப் போகாம, சட்டநாதன் என்னமோ கூச்சலிட்டானும்,அதைச் சாக்காகச் சொல்லிகிட்டு, அவனுேட மல்லுக்குப் போய் நிற்கருன். தீ அணேக்கவேண்டிய நேரத்திலே, திமிர் காட்டற வேலேக்குப் போருன். அவ்வளவு மட்டமான ஆசாமி---அப்படி இப்படின்னு சொல்லுவே . . . .*

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

**துடிதுடிப்பான்:**

தாத்தோய்! நீ, இப்படி, நியாயத்தை விளக்கமாச் சொல்றபோது, நான் திருந்திக்கமாட்டனு ....

**பழிதுடைப்பான்:**

நீயே சொல்லு. இப்ப, எப்படிப்பட்ட நேரம்! எல்லோரும்கூடி. தீயை அணைக்கணும். மத்த வேலைகளெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம்----குடம் கொடுங்க, கயிறு கொடுங்க, வீட்டுக்கு ஒரு ஆள் கொடுங்க, அப்படி இப்படின்னு நம்ம நாட்டாண்மைக்காரர், தண்டோரா போட்டாரேல்லோ ....

**துடிதுடிப்பான்:**

ஆமாம். ஊர் முச்சூடும் போட்டாங்க,தண்டோரா...

**பழிதுடைப்பான்:**

எல்லோரும், தீ அணைக்கற வேலைக்குக் கிளம்பினதைப் பார்த்தயேல்லோ ....

**துடிதுடிப்பான்:**

ஆமாம்; எங்க அப்பா, சித்தப்பா, பெரியண்ணன், எல்லோரும் போனுங்க ....

**பழிதுடைப்பான்:**

அட என் பேத்தி, படிக்கிதேடா பொண்ணு, அது கூடச் சட்டைகிட்டே போட்டுகிட்டு, என்னென்னமோ வேலே செய்யுது.

**துடிதுடிப்பான்:**

ஊர் முச்சூடும்தான் வேலே செய்யுது. ஏன்னு, தீ மூட்டிவிட்டாங்களே அவனுங்க, தீ பரவினதும், திபு திபுன்னு நம்ம ஊருக்குள்ளே நுழைவானுகளாமே....

**பழிதுடைப்பான்:**

ஆமாம்டா! அதான் அவனுங்களோட திட்டம். தீயை மூட்டிவிடுவோம்---திக்கால் ஒருவரா ஓடுவாங்க. அதே நேரத்திலே, ஊரிலே, ஜாதிச் சண்டை, சமயச் சண்டை, குலச்சண்டை கோத்திரச் சண்டை, கட்சிச் சண்டை காசுச் சண்டை இப்படிக் கிளம்பும். இப்படிக் கிளம்பி ஒருத்தரை ஒருத்தர் அடித்துக்கொண்டு கிடப்பாங்க. தீயை அணைக்கவும் கூடமாட்டாங்க; நம்மை எதிர்த்து விரட்டவும் கூடமாட்டாங்க, நாம அடிக்கலாம் கொள்ளேன்னு திட்டம் போட்டாங்க ....

**துடிதுடிப்பான்:**

ஆமா, நாட்டாண்மைக்காரர் பாட்டுப் பாடினரே, இதை எல்லாம் எடுத்துக்காட்டி ....

**பழிதுடைப்பான்:**

அதைக் கேட்டதாலே, பலபேர் சொந்த ஜோலிகளை விட்டுவிட்டு பொதுவான காரியத்தைப் பார்க்கப் போனுங்க .... அறிவூரானும் அதே போலக் கிளம்பினுன். அந்த நேரமாப் பாத்து சட்டநாதன் கொக்கரிச்சா, புத்திசாலி, என்னடா செய்வான்? போயி சிக்கிக்கிவானு, சட்டநாதன் கிட்ட ....

**துடிதுடிப்பான்:**

சிக்கிக்கிட்டா, தீயை அணைக்கற வேலைக்குக் குந்தகம் வருமே ....

**பழிதுடைப்பான்:**

அதை எண்ணிப் பார்த்துதான், எந்தெந்தச் சமயத்திலே எதை எதைச் செய்யணும் என்கிற விவரம் புரிந்தவன், இப்ப, மீசை முறுக்கி சட்டநாதனோட வம்புக்குப் போகப்படாது, காரியம் கெட்டுவிடும் என்கிற முடிவுக்கு வந்து, ஓட்டமா ஓடினுன், தீ அணைக்கற வேலே பார்க்க... அதைப் போயி ....

**துடிதுடிப்பான்:**

தாத்தா! குரலூரான், இதைப் போயி, கேலியாப் பேசருன், அறிவூரானை ஏசருன் ....

**பழிதுடைப்பான்:**

அட பைத்யக்காரப் பிள்ளையாண்டானே! குரலூரான்தான் அறிவூரானை ஏசறதையே தனக்கு வேலேயாக்கிக்கிட்டானே; இப்ப, புதுசாவா ஏசருன். என்னமோ, குரலூரான் அறிவூரானோட போக்கை, மத்த எல்லாத்திலேயும் ஒத்துக்கொண்டது போலவும், இந்த ஒண்ணிலேதான் வெறுக்கிறது போலவும் ஏன் எண்ணிக் கொண்டே ....

**துடிதுடிப்பான்:**

தாத்தா! நான் போறேன் ....

**பழிதுடைப்பான்;**

எங்கே, போறே?...

**துடிதுடிப்பான்:**

போறேன், குரலூரானைக் கேட்க, நீ சொன்னதை எல்லாம்....

**பழிதுடைப்பான்:**

போடா வேலேயத்தவனே! மலத்தை மிதிச்சிவிட்டா காலைப்போயிக் கழுவறதா, மலத்திலே அத்தர் பன்னீர் தெளிச்சி, வாசனை உண்டாக்கப்போறேன்னு சொல்றதா! நீ போயி, குரலூரானைத் திருத்தவேண்டாம்---போயி, தீயை அணைக்கிற வேலைக்கு உன்னுலே ஆன உதவியைச் செய்யப் போ....

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.